மனிதமே முதன்மை!

# முற்றம்

பல்சுவை இதழ்

இல்லம் : 10 சுற்றம் : 6 / ஜூன் 2020 / ஆசிரியர் : விசவனூர் **வே.தளபதி** / விலை : ரூ.10/-



## சென்னை துண்டிக்கப்படும் ஆபத்து
## அலட்சியத்தில் மக்கள்



விரட்டும் வெட்டுக்கிளிகள்



அமெரிக்க நிறவெறி



வலைத் தளத்தில்
வாழ்வியல்
சொல்லும்
களம்...
பாருங்கள்!
முற்றம்
MUTRAM TV
இணைய தொலைக்காட்சி

மனிதமே முதன்மை!

# முற்றம்

பல்சுவை இதழ்

Mutram monthly June 2020

ஆசிரியர்
**விசவனூர் வே.தளபதி**
இணை ஆசிரியர்
பேராசிரியர் **அப்பாத்துரை**
துணை ஆசிரியர்
**இமயவரம்பன்** பி.எஸ்சி.,எம் .ஏ.,பி.எல்.,
உதவி ஆசிரியர்கள்
**ஜெ. ராஜாசிங்,**
**ஆரோக்கிய சார்லஸ்**
தலைமைச் செய்தியாளர்கள்
**வே. வளையாபதி**
**த. ஞானமணி** பி.எஸ்.சி., பி. எட்.,
செய்தியாளர்கள்
**பொன்முடி** சிவகங்கை
**சைதை மணிமாறன்**
**செபாஸ்டின்** திருச்சி
**ஜான் ஜெயராமன்**
**சாதிக்பாட்சா**
**மு.கலைச்செல்வன்**
**ஆ.சிரோன்மணி**
**முருகன் தேவேந்திரன்**
**ஜான்ஜெனோவா ஜெர்லின்** திருச்சி

நிர்வாகம்
**மணிகண்டன்**
வடிவமைப்பு
**கவிபா வரைகலை**
புகைப்படக்காரர்
**ஆபிரகாம் லிங்கன்**

அலுவலக முகவரி
எண் 124, சுபவீ தெரு, (என்.டி.ஆர். தெரு),
ரங்கராஜபுரம்,கோடம்பாக்கம், சென்னை- 24
பேச : 8056281973, 9790764721
மின்னஞ்சல்: mutram2010@gmail.com
இணைய தளம் : **www.mutram.in**

MUTRAM
Indian Bank Account No,CA 920493454.
IFSC : IDIB000KI41
Rangarajapuram branch. Kodambakkam, chennai

## உள்ளே

இடஒதுக்கீட்டுக்கு குந்தகம்
– தலையங்கம்........ 4

நிறவெறி
– ஜீவன்குமார் மள்ளா........ 6

சென்னை துண்டிக்கப்படும் ஆபத்து
அலட்சியத்தில் மக்கள்........ 8

விரட்டும் வெட்டுக்கிளிகள்........ 10

தமிழ்நாடு அமைப்புச்சாரா
தொழிலாளர் நலவாரியங்கள்........11

இந்தியத் தேர்தல் முறை மீதான
அம்பேத்கரின் பார்வை
வ. செபாஸ்டியன் ச.ச........ 17

அவசியமில்லாமல் பழிக்கப்படும் அரிசி
– மருத்துவர் கு. சிவராமன்........ 21

மவுலானா மகம்மதலியும்
வகுப்புவாரி பிரதித்துவமும்
– பெரியார்........ 22

நாடகக் கொட்டாய் முதல்
சினிமாக் கொட்டாய் வரை (4)
– பூவைதயா........ 24

காரைக்குடி இராம. சுப்பையா
– சு. குமாரதேவன் ........26

தாத்தா குப்புசாமி மூலிகை மருத்துவம்
– மருத்துவர் இராஜா சாக்ரடீஸ்........ 30

வினை ( சிறுகதை)
– இருங்கோவேள் ........31

முற்றம் இதழில் வெளியிடுவதற்காக அனுப்பப்படும் படைப்புகளைத் திருத்துவதற்கும் வெளியிடாமல் இருப்பதற்கும் ஆசிரியருக்கு முழு உரிமை உண்டு. *– ஆசிரியர்*

காசோலை, வரைவோலை
அனுப்புவோர் "mutram" என்ற பெயருக்கு
எடுத்தனுப்பலாம்.





# இடஒதுக்கீடுக்கு குந்தகம்!

மனுவாதக் கும்பலால் மனிதஅறம் குலைக்கப்பட்டு, மிகப்பெரும்பாலானோர் கீழானவர்கள் என்று முத்திரை குத்தப்பட்டது பழைய வரலாறு. பார்ப்பனர்களின் சாதிப் படைப்பால் கீழ்நிலைக்குத் தள்ளிவிடப் பட்டவர்கள் பொருளாதார நிலையிலும் கீழானவர்களாகவே இருந்தனர். இன்னும் இருக்கின்றனர். இந்நிலை மாற வேண்டும் என்று பல பெரியவர்கள் போராடினார்கள். அதன் நல்விளைவே இட ஒதுக்கீடு. அரசுத் துறைகளில் இடஒதுக்கீடு இருக்கிறது. தனியார் துறையில் இல்லை. இதனால்தான் என்னவோ, அரசுத் துறைகளை எல்லாம் தனியார் துறைகளாக்கிக் கொண்டிருக்கிறார்கள். இந்த அறமற்ற செயலுக்கு பின்னால் மனுவாதிகள் இருக்கிறார்கள் என்பதே உண்மை.

மூன்று விழுக்காடு இருக்கிற உயர் சாதியினருக்கு? பத்து விழுக்காடு இடஒதுக்கீடு பாசகவின் சாதனை? சாதி என்று பிரித்துவிட்டாய் என்கிறபோது, அதே சாதியைக் கொண்டு, சாதி வாரிக் கணக்கெடுப்பு நடத்தி, அந்த புள்ளிவிபரப்படி ஒவ்வொரு சாதிகளின் மக்கள் தொகைக்கேற்றபடி ஒதுக்கீடுகள் வழங்குவது தானே அறநெறியாக இருக்கும். அதை விடுத்து, மூன்று குடும்பத்தில் பத்துப் பேருக்கு வேலை வாய்ப்பும், 60 குடும்பங்களில் உள்ளவர்களுக்கு 27 விழுக்காடும் கொடுப்பது கொடுமையாகத் தெரியவில்லையா? உயர்குடி ஏழைகளுக்கு? ஒதுக்கீடு செய்யப்பட்ட பத்து விழுக்காடு என்பது, எதிலிருந்து எடுக்கப்பட்டது என்றால் இதர பிற்படுத்தப்பட்ட (ஓபிசி) மக்களின் தொகுப்பிலிருந்தே எடுக்கப்பட்டுள்ளது.

ஒதுக்கீடுகளை, கல்வி, வேலை வாய்ப்பு, பொருளாதாரம் என்ற எல்லா நிலைகளிலும் சரியான விகிதத்தில் கொடுக்க வேண்டும். இதனால் பயன் பெற்றவர்களும், பெறுகிறவர்களும், பெறுவதற்கு இயலாமல் ஏங்குகிறவர்களும் சிந்திக்க வேண்டும். செயல்படுத்த களம் இறங்க வேண்டும்.



நடுவண் அரசு, பொதுத்துறை நிறுவனங்களில், பிற பிற்படுத்தப்பட்டோருக்கு 27 விழுக்காடு இட ஒதுக்கீடு நிலையை சமூகநீதி காவலர், முன்னாள் தலைமை அமைச்சர் வி.பி.சிங் அவர்கள் 1993ஆம் ஆண்டு கொண்டு வந்தார். 2007ஆம் ஆண்டு நடுவண் அரசின் கட்டுப்பாட்டில் உள்ள ஐஐடி, ஐஐஎம் போன்ற கல்வி நிறுவனங்களிலும், நடுவண் அரசு வேலைவாய்ப்புகளி லும் அரசுப் பொது நிறுவனங்களிலும் இந்த ஒதுக்கீடு செயல்படுத்தப்பட்டது.

நீட் தேர்வு முறை கொண்டுவரப்பட்ட பின்னர், மாநிலங்களில் உள்ள மருத்துவ இடங்களில் நடுவண் தொகுப்பிறக்கு வழங்கப்படும் 50 விழுக்காடு இடங் களிலிருந்து பிற பிற்படுத்தப்பட்டோருக்கு ஒதுக்கப் படவேண்டிய ஒதுக்கீடுகள் கடந்த மூன்று ஆண்டு களாக ஒதுக்கப்படவில்லை. மருத்துவப் படிப்பில் நடுவண் தொகுப்பிலிருந்து 27விழுக்காடு இடங்கள் இதர பிற்படுத்தப்பட்ட வகுப்பினருக்கு (ஓபிசி) ஒதுக்க வேண்டும் என்று சட்டம் இருந்தும், அந்த இடங்கள் ஒதுக்கப் படவில்லை.

இந்திய ஒன்றியத்தில் மருத்துவ முதுகலைப் படிப்புக்கான இடங்கள் பதினாறாயிரத்திற்கும் மேல் உள்ளன. இவற்றில் 50 விழுக்காடு இடங்கள் நடுவண் தொகுப்புக்கு வழங்க வேண்டும் என்ற நிலையில் எட்டாயிரத்திற்கும் மேற்பட்ட இடங்கள் நடுவண் அரசின் கையில் உள்ளன. இவற்றை நிரப்பிய நடுவண் அரசு தாழ்த்தப்பட்டவர்களுக்கு 15 விழுக்காடு கொடுத்துவிட்டது. பழங்குடியினருக்கு 14.5 விழுக்காடு கொடுத்துவிட்டது. பிற பிற்படுத்தப்பட்ட மாணவர் களுக்கான 27 விழுக்காடு இடங்களை ஒதுக்கவில்லை. இதனால் ஓபிசி மாணவர்களுக்குக் கிடைக்க வேண்டிய 2160 இடங்களை நடுவண் அரசு பறித்திருக்கிறது.

நீட் நுழைவுத் தேர்வு அடிப்படையில் மாநிலங் களில் இருந்து பெறப்பட்ட 15 விழுக்காடு மருத்துவப் படிப்புகளுக்கான இடங்களை இடஒதுக்கீட்டின் அடிப் படையில் நடுவண் அரசு கொடுக்கவில்லை. கடந்த நான்கு ஆண்டுகளில் அகில இந்தியக் கோட்டாவில் மொத்தமுள்ள 40,482 இடங்களில் பிற பிற்படுத்தப் பட்ட மாணவர்களுக்கு ஒதுக்கப்பட வேண்டிய 11,207 இடங்கள் மறுக்கப்பட்டுள்ளன. இவைகள் பொதுப் பிரிவுக்கு மாற்றப்பட்டுள்ளன. இந்த இடங்கள் 2017 முதல் 2019-20 ஆண்டுகளில் ஒதுக்கப்பட வேண்டி யவை. தமிழகத்தைப் பொறுத்தவரை நடுவண் அரசுக்கு கொடுக்கப்பட்ட இடங்கள் 941. மண்டல் கமிசன் பரிந்துரைப்படி தமிழகத்திற்குக் கொடுக்கப்பட வேண்டிய 27 விழுக்காடு இடங்கள் 254. இதில் ஒரு இடம் கூட ஓபிசி மாணவர்களுக்கு வழங்கப்பட வில்லை. நீட் தேர்வு முறைகளில் இட ஒதுக்கீடு ஏற் பாடுகள் கைவிடப்படக்கூடாது என்ற வழிகாட்டுதல் களும் நீதிமன்ற ஆணைகளும் இருக்கின்றன. ஆனால், அவற்றை அரசு கருத்தில் கொள்ளவில்லை என்பது மிக மோசமான நிலையாகும்.

**சாதி வாரிக் கணக்கெடுப்பு நடத்தி, அந்த புள்ளிவிபரப்படி ஒவ்வொரு சாதிகளின் மக்கள் தொகைக்கேற்றபடி ஒதுக்கீடுகள் வழங்குவது தானே அறநெறியாக இருக்கும். அதை விடுத்து, மூன்று குடும்பத்தில் பத்துப் பேருக்கு வேலை வாய்ப்பும், 60 குடும்பங்களில் உள்ளவர்களுக்கு 27 விழுக்காடும் கொடுப்பது கொடுமையாகத் தெரியவில்லையா? உயர்குடி ஏழைகளுக்கு? ஒதுக்கீடு செய்யப்பட்ட பத்து விழுக்காடு என்பது, எதிலிருந்து எடுக்கப்பட்டது என்றால் இதர பிற்படுத்தப்பட்ட (ஓபிசி) மக்களின் தொகுப்பிலிருந்தே எடுக்கப்பட்டுள்ளது.**

இடஒதுக்கீடு என்றாலே தாழ்த்தப்பட்டவர்களுக் கும் பழங்குடியினருக்குமானது என்ற எண்ணத்தை 50 விழுக்காட்டிற்குமேல் இருக்கிற பிற பிற்படுத்தப்பட்ட (ஓபிசி) மக்கள் மனங்களில் விதைத்தனர் மனுவாதிகள். இதைக் கொண்டு, பட்டியல் இனத்தவருக்கும் பிற பிற் படுத்தப்பட்ட மக்களுக்கும் மோதல் போக்குகளை வளர்த்தனர் மனுவாதிகள். மனுவாதிகளால் தாங்கள் பாதிக்கப்படுகிறோம் என்ற நினைவே இல்லாமல், இதர பிற்படுத்தப்பட்ட மக்கள், பட்டியல் இனத்தவர் களோடு முரண்பட்டு நிற்கின்றனர். இந்த இரண்டு குழுக்களும் முட்டிக்கொள்ள, மனுவாதிகள் மொத்தப் பயன்களையும் அடைந்து கொண்டிருக்கின்றனர்.

சில அறிவுஜீவிகள்? அவ்வப்போது சொல்வார்கள் திறமைக்குதான் முதலிடம் கொடுக்க வேண்டும் என்று. இதில், நாங்கள் மட்டுமே திறமையானவர்கள் என்று சொல்லக்கூடிய தீக்குணம் உள்ளிருப்பதை நாம் உணர வேண்டும். ஒரு போட்டியில் ஒன்றுக்கு மேற்பட்ட வர்கள் இருந்தால்தானே அதில் யார் திறமையானவர் என்று காண முடியும். ஒருவன் மட்டுமே நின்று கொண்டு, நான் திறமையானவன் என்று சொன்னால், அதை ஏற்க முடியுமா? அப்படி திறமை, ஆற்றலின் மொத்த உருவங்களாக இருக்கிற மனுவாதக்கூட்டம் ஏன் பத்து விழுக்காடுக்கு வாயில் எச்சில் ஒழுக நிற்கிறது?

மக்களைப் பிரித்தாளும் இத்தகைய கேடுகெட்ட நிலைகளுக்கெல்லாம் ஒரு முடிவு வேண்டும். ஒன்று சாதி ஒழிப்பாக இருக்க வேண்டும். அல்லது, சாதி வாரியான மக்கள் தொகை கணக்கெடுப்பு எடுத்து, மக்கள் தொகையின் எண்ணிக்கைக்கு ஏற்ப, இட ஒதுக் கீடுகள், தனியார் துறை உட்பட எல்லாத்துறைகளிலும் கொடுக்கப்பட வேண்டும். இதுவே சமூக நீதியாக இருக்கும்.

**ஆசிரியர்.**

# நிறவெறி

ஜீவன்குமார் மள்ளா

அனைத்து சாதி, நிறம், இனம், பாலினம், மதம், மொழி மற்றும் பகுதி போன்ற பாகுபாடு இல்லாத உலகை வலுப்படுத்த ஒன்றிணைந்து செயற்படுங்கள்.

இந்தியாவில் உள்ள எங்கள் சொந்த சகோதர சகோதரிகளின் வீடுகளில் கேட்ட புலம்பல்களின் பிரதிநிதித்துவமாக இந்தக் கடிதம் எழுதப்படுகின்றது.

தன்னிச்சையான சர்வாதிகார மற்றும் பாரபட்சமான ஒழுக்கநெறி ஆகியவற்றினால் ஜார்ஜ் பிலோய்ட் என்ற ஒரு கருப்பின மனிதன் கொடூரமான முறையில் கொலை செய்யப்பட்டதை கேள்விப்பட்டபோது நான் உணர்ந்த வேதனையால், இந்தக் கடிதத்தை எழுத நான் தூண்டப்பட்டேன்.

பூமியின் ஏதோ ஒரு மூலையில் மனித மாண்புக்காகவும், சுயமரியாதைக்காகவும் குரல் கேட்கும் போது அது எங்களுக்குப் பழக்கப்பட்ட குரல்தான் என எங்களுக்குத் தெரியும். அந்தக் குரல் எங்கள் வீட்டில் சொந்த சகோதரத்துவத்தின் குரல் போன்றது. அமெரிக்காவில் உள்ள கறுப்பின மக்களிடம் இருந்து கேட்கும் குரல் எங்களுடைய சொந்தக் குரல் போன்றது. ஆதலால் தான் நான் இந்தக் கடிதத்தை உலகத் தலைவர்களுக்கு எழுதுகிறேன்.

அமெரிக்காவில் கறுப்பின (ஆப்பிரிக்க அமெரிக்க) மக்களுக்கு எதிராக வன்முறைச் செயல்களை நடத்திய அரசை நாங்கள் வன்மையாகக் கண்டிக்கிறோம்.

குற்ற உணர்ச்சியால் காவல்துறை சமூகம் உடனடியாக மண்டியிட்டு மன்னிப்புக் கேட்பதை சமூக ஊடகங்கள் மூலமாக காண முடிந்தது. உங்கள் நாட்டில் உள்ள மதக் கொள்கைப் பிரசங்கங்களும், இறை நெறிமுறை இலட்சியங்களும் தான் காவல் துறை சமூகத்தை மன்னிப்புக் கேட்க வழிவகுத்தன என்றால் அது மிகையாகாது. காவல்துறை சமூகத்தினர் பட்டவர்த்தனமாக மன்னிப்புக் கேட்கும் செயலைப் பார்க்கும் போது, மனித நேயம் முற்றிலுமாக இறந்துவிடவில்லை என்ற நம்பிக்கை பிறக்கின்றது.

உங்கள் நாட்டில் நிறவெறி கொண்ட வெள்ளை இன மக்கள் தங்களது அன்றாட வாழ்க்கையில் கறுப்பின மக்களை எப்படி உளவியல் ரீதியாக அச்சுறுத்துவதில் தீவிரமாக செயல்படுகிறார்கள் என்பதற்கு இந்த மிருகத்தனமான கொலைச் சம்பவம் ஒரு சிறு உதாரணம் தான் என நினைக்கத் தோன்றுகிறது.

பொதுவெளியில் மிகவும் அப்பட்டமாக, பகல் வெளிச்சத்தில் ஒரு துளியளவும் பயம் இல்லாமல், பின் விளைவுகளைப் பற்றி எந்தக் கவலையும் இல்லாமல்,



காவல்துறை அதிகாரிகளால் அரங்கேற்றி இருக்கும் இந்தக் கோரச் செயலைப் பார்த்தால் அரசே ஏற்பாடு செய்யும் நிகழ்வுகளில் ஒன்றோ என சிந்திக்க வைக்கின்றது.

உலகெங்கிலும் உள்ள பல நாடுகள் சமத்துவத்திற்காகவும், நீதிக்காவும், விடுதலைக்காகவும் போராடும் மக்களுக்கு எங்கள் நாட்டின் சார்பாக எங்கள் முழு ஆதரவினை வழங்குகின்றோம். அதே போல உங்கள் நாட்டில் நடக்கும் இனவெறிக்கு எதிரான போராட்டங்கள் மற்றும் ஆர்ப்பாட்டங்களுக்கு நாங்கள் எங்கள் முழு ஆதரவினை வழங்குகின்றோம்.

சாதி என்பது இந்தியாவில் பின்பற்றப்படும் ஒரு பாகுபாடான நடைமுறையாகும். இது இனவாதத்தை விட ஒரு மில்லியன் மடங்கு கொடூரமானது. இந்தியாவில் உள்ள சாதியவாதம் எங்கள் முன்னோர்களின் உயிர்களை கடுமையாக காவு வாங்கியுள்ளது. இன்றைய காலகட்டத்திலும் சாதியவாதம் நடைமுறையில் உள்ளது. அது இந்தியாவில் வெகுமக்களாக இருக்கக்கூடிய பூர்வீகக் குடிகளான திராவிட மக்களை கடுமையாக துற்புறுத்தி வருகிறது. அது பல கொலைகளைக் காட்டிலும் விவரிக்க முடியாத அடக்குமுறைகளுக்கும் வன்முறைகளக்கும் நிகரானது.

எங்கள் நாட்டில் நாங்கள் சாதியத்திற்கு எதிராகப் பேராடி வருகின்றோம். இனவாதத்திற்கு எதிராகப் போராடும் கறுப்பின மக்களும், சாதியத்திற்கு எதிராகப் போராடும் திராவிட மக்களின் போராட்டமும் நேர்கோட்டில் பயணிப்பதால், கறுப்பின மக்களின் போராட்டத்திற்கு, திராவிட மக்களாகிய நாங்கள ஒன்றிணைந்து எங்களின் முஷ்டிகளை உயர்த்தி எங்களின் ஆதரவினை தெரிவித்துக் கொள்கின்றோம்.

கறுப்பின மக்களின் கிளர்ச்சி, இனவெறிக்கு முற்றுப்புள்ளி வைக்க வேண்டும். இதேபோல், சாதியவாதத்திற்கு எதிரான எங்களின் நீண்ட நெடிய வரலாற்றுப் போராட்டம் சாதிவாதத்திற்கு முற்றுப்புள்ளி வைக்க வேண்டும். அந்த நம்பிக்கையில் பாகுபாடுகளுக்கு எதிரான உங்கள் உலகளாவிய போராட்டத்தை நாங்கள் முழு மனதுடன் ஆதரிக்கிறோம்.

அமெரிக்காவின் நீதித் துறையிடம் நாஙகள் கேட்பது என்னவென்றால், கறுப்பின மக்களுக்கு நடந்த அனைத்து காவல் மரணங்களை, எந்வொரு அரசியல் தலையீடும் இல்லாமல், சுயாதீனமாக விசாரிக்க வேண்டும். அப்போதுதான் கறுப்பின மக்கள் கண்ணியத்துடனும் நம்பிக்கையுடனும் திறந்த வெளியில் சுதந்திரமாக அச்சமின்றி நடக்க முடியும்.

நாங்கள் அமெரிக்காவிடம் கேட்பது உங்களடைய சொந்த சட்ட உரிமை மசோதாவை கடைபிடிக்க போதுமான தைரியம் உங்களுக்கு இருக்க வேண்டும். அப்படி உங்களுக்கு இருக்கும் பட்சத்தில் தான் நிறம், மதம், இன, பாலியல் பாகுபாடுகளுக்கு அப்பாற்பட்ட, அது எல்லா அமெரிக்கர்களுக்குமான சுதந்திர நிலமாக இருக்க முடியும்.

**உங்கள் நாட்டில் நிறவெறி கொண்ட வெள்ளை இன மக்கள் தங்களது அன்றாட வாழ்க்கையில் கறுப்பின மக்களை எப்படி உளவியல் ரீதியாக அச்சுறுத்துவதில் தீவிரமாக செயல்படுகிறார்கள் என்பதற்கு இந்த மிருகத்தனமான கொலைச் சம்பவம் ஒரு சிறு உதாரணம் தான் என நினைக்கத் தோன்றுகிறது. கறுப்பின மக்களின் கிளர்ச்சி, இனவெறிக்கு முற்றுப்புள்ளி வைக்க வேண்டும்.**

இந்தப் பிரச்சினை கறுப்பின மக்களின் உயிர் சம்மபந்தப்பட்டதுடன் தொடர்புடையதாக இருந்தாலும், புவியியல் எல்லைகளுக்கு அப்பால் ஒரு இனக் கூட்டம் துயரமடைந்து கொண்டு இருப்பவர்களடன் இணைந்து இருக்க வேண்டும் என எங்களின் உள்ளுணர்வு எங்களை எச்சரிப்பதால் நாங்கள் இணைந்து நிற்கின்றோம். இது எங்களின் சொந்த சகோதர சகோதரிகளின் சுயமரியாதை பிரச்சினையாக நாங்கள் பார்க்கிறோம்.

பாகுபாடற்ற உலகம் உருவாக நாம் அனைவரும் ஒரே குடையின் கீழ் போராடுவோம்! வெற்றி பெறுவோம்!!

**ஜீவன்குமார் மள்ளா**
தேசியத் தலைவர்
பகுஜன் திராவிட கட்சி
வீட்டு எண்: 6659, தெரு எண்: 7,
பிளாக் எண்: 9, தேவ் நகர்,
கரோல் பாக், புதுடெல்லி 110005

# சென்னை துண்டிக்கப்படும் ஆபத்து - அலட்சியத்தில் மக்கள்!



சென்னை மக்களுக்கு தொற்றின் தீவிரம் புரியவில்லை. சினிமாக பார்த்து மரத்துப் போனவர்கள். தமிழக நிலவரம் கொரோனாவில் மகா மோசமாக சென்று கொண்டிருப்பது சாதாரண விசயமாகப்படவில்லை. உயிர்ப்பலிகள் அதிர வைக்கின்றன.

சென்னை இதுவரை மிகப்பெரிய சிக்கல்களை, மிரட்டல்களை சந்தித்த நகரம் அல்ல. முதல் உலகப்போரில் ஜெர்மன் நீர்மூழ்கிக் கப்பல் குண்டு வீசியதைத் தவிர வேறு எந்த மிரட்டலும் வந்ததில்லை. மழை வெள்ளம் மட்டும் மிரட்டும். வேறு எந்த பெரும் மிரட்டலும் பாதிப்பும் இதுவரை வந்ததில்லை.

ஆனால் கொரோனா, சென்னை வரலாற்றிலே மிகப்பெரும் சவாலாக உருவெடுத்து நிற்கின்றது. திரும்பும் இடமெல்லாம் கொரோனா என, அது மிகப்பெரும் திகிலை கொடுக்கின்றது. அணுவெடிப்பு வேகத்தில் அதன் பரவல் இருப்பது மிகப்பெரும் ஆபத்து.

குழந்தைக்கு கொரோனா, 17வது மாணவி மரணம் இன்னும் சில பிரமுகர்கள் ரகசிய சிகிச்சையில் இருக்கிறார்கள் என்பது கலங்க வைக்கும் விசயம். சென்னையிலும் இதர தமிழகப்பகுதிகளிலும் மிக வேகமாக பரவிக் கொண்டிருக்கும் கொரோனாத் தொற்று உலகை அதிர வைக்கின்றது. இந்திய அரசே சிறிது பதற்றத்தில் இருக்கின்றது.

மெல்ல, மெல்ல உலகம் இயங்கத் தொடங்கும் நேரமிது. சூன் 15க்குப் பின் பன்னாட்டுப் போக்குவரத்துகள் தொடங்கப்படலாம். ஆனால், இனி உலகெல்லாம் இயங்கத் தொடங்கும்போது சென்னை துண்டிக்கப்படும் அபாயம் உள்ளது. பன்னாட்டு வானூர்திகளோ, கப்பல்களோ சென்னைக்கு வராது. இது பெரும் முடக்கத்தைக் கொடுக்கும். இன்னும் சில நாட்களில் சென்னையின் கொரோனா அளவு மிகக் கடுமையாக இருக்கும் என்கின்றார்கள். அப்பொழுது சென்னை முழுவதும் துண்டிக்கப்படாலம்.

தமிழகத்தின் இதர பகுதிகளிலும் நிலைமை சரியாக இல்லை. ஒருவித வேகமான கொரோனா அலை தெரிகின்றது. நிச்சயம் மிகப்பெரிய நடவடிக்கை எடுத்து இன்னும் இருவாரங்களுக்கு மகாக் கடுமையான இறுக்கமான ஊரடங்கை அறிவிக்க வேண்டிய நேரமிது. ஆனால் அரசு தயங்குகின்றது.

அரசுக்கு வரும் வருமானம் பாதிக்கும். மாநில அரசு இயங்க முடியாது எனும் அச்சத்தில் மிகப்பெரிய விலை கொடுக்கத் தயாராகிறது தமிழக அரசு. சென்னை மோசமான நிலைக்குத் தள்ளப்படும் என்று சொல்லப்படுகிறது. இதர சூழல்களும் சரியாக இல்லை.



மிகப்பெரும் நெருக்கடியில் மாநிலம் சிக்கப் போகின்றது. பொறுப்பற்ற மக்கள் இருந்தால் அரசு உறுதியாய் இருந்து அடக்க வேண்டும். அரசு பொறுப்பற்று இருந்தால் மக்கள்தான் திருந்த வேண்டும். இரண்டு தரப்புமே பொறுப்பற்று இருந்தால், மாநிலம் நாசமாகிப்போகும்.

பலத்த எச்சரிக்கை தமிழகத்துக்கு விடப்பட்டி ருக்கும் நேரமிது. புயல் ஆபத்துக்கெல்லாம் ஓடி ஓடி பாதுகாக்கும் தமிழகம், கொரோனாவில் கோட்டை விட்டது மட்டுமல்ல, இன்னும் ஆபத்தை உணர மறுப்பது சோகம்.

இனி சர்வதேசம் இயங்கும் பொழுது துண்டிக்கப் படுவது சென்னையாக மட்டும் இராது. திருச்சி, மதுரை போன்ற வானூர்தி நிலையங்களாகவும் இருக்கலாம். தூத்துக்குடியாகவும் இருக்கலாம். இப்போது முடக்கினாலும் சென்னை மீள சில மாதங்கள் ஆகும் என்பதால் நிலையின் வீரியம் புரிந்து அரசு செயல்பட வேண்டும்.

சென்னை போலவே சிக்கியிருக்கும் இன்னொரு நகரம் மும்பை. அங்கு இனி பருவமழை தொடங்கப் போகிறது. மும்பையின் மழை சாதாரணமானது அல்ல. அந்தப் பெரும் மழையில் தனித்திருத்தல் சமூக இடைவெளி சாத்தியமில்லாத ஒன்று. மும்பைக்கு சிவப்பு எச்சரிக்கை விடப்பட்டிருக்கிறது.

தமிழக மக்கள் இனியும் விழித்துக் கொள்ளா விட்டால் அதற்கான விலை மிக மிக அதிகமாக இருக்கும்.

*பகிரிப் பதிவு.*

## கொரோனா சூழலியச் சொற்கள்!

| | |
|---|---|
| Hand sanitizer | கைத்தூய்மை |
| Mask | முகக்கவரி |
| Outbreak | வெளிப்பரவல் |
| Epidemic | குறுந்தொற்று |
| Pandemic | பெருந்தொற்று |
| Virus | நச்சில் / நச்சுயிரி |
| Frontline workers | முனைமுகப் பணியாளர்கள் |
| Confirmed case | உறுதி நேர்வு |
| Social distance | கூடல் இடைவெளி |
| Immunity | தடுப்பு ஆற்றல் |
| Lockdown | ஊரடங்கு |
| Isolation | தனிமை |
| Contact tracing | தொடர்பர் துப்பாய்வு |
| Incubation period | அரும்பல் காலம் |
| Essential service | அடிப்படைத் தேவைப் பணிகள் |
| Antibody | நோய் எதிரி |
| Critical | கடுநிலை |
| Treatment | பண்டுவம் |
| Mortality | இறப்பியல் |
| Closed Contact | நெருக்கத் தொடர்பு |
| Ventilator | மூச்சுப் பொறி |
| Screening | பகுத்து ஆய்தல் |
| Self monitor | தற்காணிப்பு |
| Plasma | ஊநீர் |

## உந்து வண்டிகள்

பேருந்து
மகிழுந்து
சீருந்து
சரக்குந்து
சுமையுந்து
விசையுந்து
மிதியுந்து
கூடுந்து
மூடுந்து
ஏருந்து
வானுந்து
காப்புந்து
துள்ளுந்து
நீளுந்து
தொங்குந்து
பகட்டுந்து



# விரட்டும் வெட்டுக்கிளிகள்

மதுரை மக்களவைத் தொகுதி எம்.பி., சு.வெங்கடேசன் எழுதிய 'காவல் கோட்டம்' நாவலில், "17ஆம் நூற்றாண்டு காலத்தில் மதுரைக்கு வடக்கிலிருந்து வெட்டக்கிளிகள் படையெடுத்து வந்தன. மேகக் கூட்டங்கள் போல வந்து அப்படியே செடி, கொடிகள், பயிர்களின் மீது மொய்த்தன. நிலமெங்கும் பெருமழை அடிப்பது போல நெறு நெறுவென்று சத்தம். பயிர்களை விட்டு அவை எழுந்து பறந்தவுடன் இலைகளற்ற வெறுந்தண்டுகளே எஞ்சின. இரண்டு நாட்களுக்கு படை படையாகத் தெற்கு நோக்கிச் சென்றன. நாடே பசுமையற்று மொட்டையாகப் போய்விட்டது" என்று குறிப்பிடப் பட்டுள்ளது. மேலும், "இரண்டு ஆண்டுகளாக மழை இல்லை. மக்கள் சாணாக் கிழங்குகளைத் தேடி காடெல்லாம் அலைந்தனர். தானூரில் பாதிப் பிள்ளைகள் வயிற்றுப் போக்கில் மடிந்தனர்.

பேதி பரவத் தொடங்கியது. உயிரைத் தக்க வைத்தவர்கள் இறந்தவர்களைத் தூக்கிக் கொண்டு சுடுகாட்டுக்குப் போனார்கள். எல்லா ஊர்களிலும் நாளெல்லாம் சனங்கள் சுடுகாட்டில் கும்பல் கும்பலாக நின்றிருந்தனர். புதைக்க இடமில்லாமல் ஆனது. தீ எரிந்து கொண்டே இருந்தது. மூன்றாண் டுகள் கழித்து நிலைமை இயல்புக்கு மீண்டபோது மூன்றிலொரு பங்கு மக்கள் சுடுகாட்டிலும் மீதிப்பேர் உயிரைப் பிடித்துக் கொண்டு ஊர்களிலும் இருந்தனர்..." என வெட்டுக்கிளிகளால் மதுரையில் விளைந்த விபரீதத்தை இந்த நாவல் வரிகள் விவரிக்கின்றது.

இதுபற்றி மதுரை எம்.பி. சு.வெங்கடேசன் கூறுகையில், "17ஆம் நூற்றாண்டின் தொடக்கத்தில் வெட்டுக்கிளி படையெடுப்பு மதுரையில் பாதிப்பை ஏற்படுத்தியது. இதைப்பற்றி 'மிஷனரிகள்' எனப்படும் கிறித்தவ இறைப்பணியாளர்கள் தங்களது குறிப்புகளில் பதிவிட்டுள்ளனர். அதை அடிப் படையாகக் கொண்டு 1852இல் 'மெஜூரா கன்ட்ரி மேனுவல்'லில் நெல்சன் என்ற வரலாற்றாளரும் பதிவு செய்துள்ளார். இதனைத் தொடர்ந்து 1910ல் மதுரை கெஜட்டியரில் இது குறித்து பிரான்சிஸ் எழுதியுள்ளார். இது போன்ற ஆதாரங்களைக் கொண்டே 'காவல் கோட்டம்' நாவலில் இந்த நிகழ்வை எழுதி இருந்தேன்.

தமிழகத்திற்குள் ஒருபோதும் வெட்டுக்கிளிகள் வருகை இல்லையென அரசு கூற முடியாது. வராது என்றும் கூறக்கூடாது. தற்போதைய வெட்டுக்கிளிகளின் அச்சுறுத்தல் தொடர்பாக அரசு விழிப்புணர்வோடு இருக்க வேண்டும். அலட்சியம் காட்டக் கூடாது. தேவையான முன்னெச்சரிக்கை நடவடிக்கை கட்டாயம் எடுக்க வேண்டும் என்றார்.

மேற்கண்ட செய்திகள் ஒரு புறம் இருக்க, இந்தப் புவிபந்தில் வெட்டுக் கிளிகள் பல்லாயிரக் கணக்கான ஆண்டுகளுக்கு முன்பிலிருந்து வாழ்ந்து வருகின்றன. இப்போது நாம் அச்சப்படும் இதே நிலைதான் அப்போதும் இருந்திருக்கின்றன. அதற்கான வரலாற்றுச் சான்றுகள் நமக்கு சான்று பகர்கின்றன. குறிப்பாக வெட்டுக் கிளிகளை போர் ஆயுதங்களா கவும் பயன்படுத்தியுள்ளனர்.

மேற்குறிப்பிடும் செய்திகளில் எழுத்தாளர் சு.வெங்கடேசன் அவர்கள் குறிப்பிடுவது போல் கிறித்தவ இறைப்பணியாளர்கள் வெட்டுக்கிளி களைப் பற்றி பதிவு செய்திருப்பது உண்மைதான். அது கிறித்தவ வேதாகமத்தில் பழைய ஏற்பாட்டில் பதிவு செய்யப்பட்டுள்ளது.

*"நான் மழையில்லாதபடிக்கு வானத்தை அடைத்து, அல்லது தேசத்தை அழிக்க வெட்டுக் கிளிகளுக்கு கட்டளையிட்டு, அல்லது என் ஜனத்திற்குள் கொள்ளைநோயை அனுப்பும் போது, என் நாமம் தரிக்கப் பட்ட என் ஜனங்கள் தங்களைத் தாழ்த்து, ஜெபம் பண்ணி, என் முகத்தைத் தேடி பொல்லாத வழிகளை விட்டுத் திரும்பினால், அப்போது பரலோகத்திலிருக்கிற நான் கேட்டு, அவர்களை பாவத்தை மன்னித்து அவர்கள் தேசத்திற்கு நன்மை கொடுப்பேன்"*

நாளாகமம் 7:1314

# தமிழ்நாடு அமைப்புசாரா தொழிலாளர் நலவாரியங்கள்

தமிழ்நாட்டிலுள்ள அமைப்புசாரா தொழில்களில் ஈடுபட்டுள்ள தொழிலாளர்களின் பணி நிலைமைகளை ஒழுங்குபடுத்தவும், அவர்களுக்கு சமூக பாதுகாப்பு அளிக்கவும், தமிழ்நாடு அரசு 1982ம் ஆண்டில் தமிழ்நாடு உடல் உழைப்புத் தொழிலாளர்கள் (வேலைவாய்ப்பு மற்றும் பணி நிலைமைகள் முறைப்படுத்துதல்) சட்டத்தினை இயற்றியது.

**தமிழக அரசால் செயல்படுத்தப்பட்டு வரும் 17 நலவாரியங்கள்**

1. தமிழ்நாடு கட்டுமானத் தொழிலாளர்கள் நலவாரியம்

2. தமிழ்நாடு உடலுழைப்புத் தொழிலாளர்கள் நலவாரியம்.

3. தமிழ்நாடு அமைப்புசாரா ஓட்டுநர்கள் நலவாரியம்,

4. தமிழ்நாடு சலவைத் தொழிலாளர்கள் நலவாரியம்

5. தமிழ்நாடு முடிதிருத்துவோர் நலவாரியம்.

6. தமிழ்நாடு தையல் தொழிலாளர்கள் நலவாரியம்

7. தமிழ்நாடு கைவினைத் தொழிலாளர்கள் நலவாரியம்

8. தமிழ்நாடு பனைமரத் தொழிலாளர்கள் நலவாரியம்.

9. தமிழ்நாடு கைத்தறி மற்றும் கைத்தறிப்பட்டு நெய்யும் தொழிலாளர்கள் நலவாரியம்.

10. தமிழ்நாடு ஓவியர் நலவாரியம்

11. தமிழ்நாடு பொற்கொல்லர் நலவாரியம்

12. தமிழ்நாடு பொற்கொல்லர் நலவாரியம்

13. தமிழ்நாடு மண்பாண்டத் தொழிலாளர்கள் நலவாரியம்.

14. தமிழ்நாடு வீட்டுப்பணியாளர்கள் நலவாரியம்.

15. தமிழ்நாடு விசைத்தறி நெசவாளர்கள் நலவாரியம்

16. தமிழ்நாடு பாதையோர வணிகர்கள் மற்றும் கடைகள் மற்றும் நிறுவனங்களில் பணிபுரியும் தொழிலாளர்கள் நலவாரியம்,

17. தமிழ்நாடு சமையல் தொழிலாளர்கள் நலவாரியம்.

தமிழ்நாடு கட்டுமானத் தொழிலாளர்கள் நலவாரியம் 30.11.1994 அன்று அரசால் ஏற்படுத்தப்பட்டது. இவ் வாரிய நலத்திட்டத்தின் அட்டவணையில் குறிப்பிட்டுள்ள தொழில் இனங்கள் ஆகிய 53 வகையான தொழில்களில் பணிபுரியும் தொழிலாளர்களுக்கு நலத் திட்ட உதவிகள் வழங்கப்பட்டு வருகின்றன.

**53 வகையான கட்டுமானத் தொழில்கள்**

1. கல் உடைப்பவர் (அ) கல்வெட்டுபவர் (அ) கல்பொடி செய்பவர்.

2. கொத்தனார் (அ) செங்கல் அடுக்குபவர்.

3. தச்சர்

4. பெயிண்டர் அல்லது வார்னிஷ் பூசுபவர்

5. கம்பி வளைப்பவர் உட்பட பிட்டர்

6. சாலை குழாய் பதிப்பு பணியாளர்



7. எலக்ட்ரிஷியன்

8. மெக்கானிக்

9. கிணறு தோண்டுபவர்

10. வெல்டர்

11. தலைமை கூலியாள்

12. கூலியாள்

13. தெளிப்பவர் மற்றும் கலப்பவர் (சாலை பரப்பும் பணி)

14. மரம் அல்லது கல்அடைப்பவர்

15. கிணற்றில் தூர் எடுப்பவர்

16. சம்மட்டிஆள்

17. கூரைவேய்பவர்

18. மேஸ்திரி

19. கருமான், கொல்லன்

20. மரம்அறுப்பவர்

21. சந்துகள்அடைத்து நீர் உட்புகாமல் செய்பவர்

22. கான்க்ரீட்மிக்ஸர்ஆப்ரேட்டர் உட் பட கலப்பவர்

23. பம்ப்ஆபரேட்டர்

24. மிக்ஸர்டிரைவர்

25. ரோலர்டிரைவர்

26. கனரக இயந்திர கட்டுமானப் பணியில் ஈடுபட்டுள்ள கலாசிஸ் மற்றும் சுரங்கப்பணியாளர்

27. காவலாளி

28. மொசைக்பாலீஸ்செய்பவர்

29. சுரங்கவழிதோண்டுபவர்

30. பாறைஉடைப்பவர்குவாரிவேலையாள்

31. சலவைக்கல் / கடப்பாக்கல்வேலையாள்

32. சாலைப்பணியாளர்

33. கட்டுமானப்பணி தொடர்பான மண் வேலை செய்பவர்

34. சுண்ணாம்பு பதப்படுத்துவோர்

35. கடல் அரிப்புதடுப்பு பணியில் ஈடுபடும் வேலையாள்

36. அணைகள் கட்டுமானம் மற்றும் பராமரிப்பு, பாலங்கள், சாலை அல்லது மற்ற கட்டு மானப் பணிகளில் உள்ள படியாக ஈடுபட்டுள்ள மற்ற வகையான தொழிலாளர்கள்

37. அணைகள்கட்டுமானம்மற்றும்பராமரிப்பு, பாலங்கள், சாலை அல்லது மற்ற கட்டுமானப் பணிகளில் உள்ளபடியாக ஈடுபட்டுள்ள மற்ற வகையான தொழிலாளர்கள்

38. தொழிற்சாலை சட்டத்தின் கீழ் வராத செங்கல் சூளை தொழிலாளர்கள்

39. பந்தல்கட்டுமானம்

40. தீயணைப்பு கருவிகளை பொருத்துதல் மற்றும் பழுது பார்த்தல்

41. குளிரூட்டுதல் மற்றும் சூடுபடுத்துதல் கருவிகளை பொருத்துதல் மற்றும் பழுது பார்த்தல்

42. மின்தூக்கிமற்றும்மின்படிபொருத்துதல்

43. பாதுகாப்பு கதவுகள் மற்றும் கருவிகள் பொருத்துதல்

44. இரும்பு மற்றும் உலோக கிராதி ஜன்னல் கதவுகள் புனைத்து கட்டுதல் மற்றும் பொருத்துதல்.

45. நீர்எடுக்கும் கட்டமைப்பு தொடர்பான கட்டுமானம்

46. கார்பென்டிங், பொய்கூரைவிளக்குஅமைத்தல், மேற்பூசுதல்தொடர்பானஉள்ளலங்காரம்

47. கண்ணாடிவெட்டுதல், இழைத்தல் மற்றும் கண்ணாடி பேனல்கள் பொருத்துதல்

48. சோலார் பேனல் போன்ற மின்மிகை சாதனங்கள் பொருத்துதல்

49. சமையல் கூடம் போன்ற இடங்களில் நவீனஅறைகள் அமைத்தல்

50. முள்புனைத்து அமைக்கப்பட்ட கான்கிரீட் பொருட்கள் பொருத்துதல்

51. கோல்ப் மைதானம், நீச்சல்குளம் உட்பட்ட விளையாட்டு மற்றும் பொழுது போக்கு அரங்குகளை கட்டுதல்

52. கல்பெயர்பலகை, தெருஅறைகலன்கள், பேருந்து நிழற் கூரை, பணிமனைகள் நிறுத்தங்கள் மற்றும் அறிவிப்பு குறி போன்ற கட்டுமானம்மற்றும்நிறுத்துதல்

53. ரோட்டரி மற்றும் செயற்கை நீருற்று போன்ற கட்டுமானம்

54. பொதுபூங்கா நடைபாதைபோன்ற கட்டுமானம் மற்றும் இயற்கை நிலைக்காட்சி அமைத்தல்

**2. தமிழ்நாடு உடலுழைப்புத் தொழிலாளர்கள் நலவாரியம் மற்றும் 15 நலவாரியங்கள்**

தமிழ்நாடு உடலுழைப்புத் தொழிலாளர்கள் நலவாரியம் 17,03,1999 அன்று அரசால் ஏற்படுத்தப் பட்டது, இவ்வாரியங்கள் மூலம் நலத்திட்டங்களில் பட்டியல் இடப்பட்ட தொழில் இனங்கள்ஆகிய 60 வகையான தொழில்களில்பணிபுரியும் தொழிலாளர் களுக்கு நலத்திட்ட உதவிகள் வழங்கப்பட்டு வருகிறது.

**60 வகையான அமைப்புசாரா தொழில்கள்**

1. சுமைஏற்றுதல், இறக்குதல், அடுக்குதல், சிப்பம் கட்டுதல், தூக்கிச்செல்லுதல், எடைபோடுதல், அளவிடுதல் அல்லது இத்தகைய வேலைகளுக்கானஆயத்த அல்லது இதுதொடர்பான பணி உள்ளிட்ட உடலுழைப்பு வேலைகளில் ஈடுபடுதல்.

2. சந்தைஅல்லதுகடைஅ ல்லதுடிப்போஅல்லதுதொழிற்சாலை அல்லது சேமிப்புக் கிடங்கு அல்லது கிடங்கு அல்லது இதர நிறுவனம்.

3. 1948ஆம்வருடதுறைமுகத் தொழிலாளர்கள் சட்டத்திற்குட்படாத துறைமுகங்கள்,

4. இரயில்வே நிர்வாகத்தால் பணிய மர்த்தப்படாத உடலுழைப்புத் தொழிலாளர்கள் பணிபுரியும் இரயில் வேயார்டுகள் மற்றும் குட்ஸ்ஷெட்டுகள்.

5. 1959 ஆம்வருட தமிழ்நாடு வேளாண் விளை பொருள்சந்தைகள் சட்டத்தால்அமைக்கப் பட்ட சந்தைக் குழுக்களின் கட்டுப்பாட்டிற்கு உட்பட்ட சந்தை.

2. பொதுப் போக்குவரத்து வாகனங்களில் சுமை ஏற்றுதல், இறக்குதல் மற்றும் அது தொடர்பான இதரவேலைகள்.

3. உணவுதானியங்கள் ஏற்றுதல், இறக்குதல் மற்றும் கிடங்குகளுக்கு கொண்டு செல்லுதல், உணவு தானியங் களை பிரித்தல் மற்றும் சுத்தம்செய்தல், உணவு தானியங்களை பைகளில் நிரப்புதல்மற்றும் அந்தப் பைகளை தைத்தல் மற்றும் இதன் தொடர்புடைய இதரவேலைகள்,

4. உப்பளங்களில் வேலைசெய்தல்

5. கள்இறக்கும் தொழில்

6. படகுப்பணி

7. மரத்தொழில்

8. கயிறுதொழில்

9. தோல்பதனிடுதல்மற்றும்தோல்உற்பத்தி

10. தானியங்கிபணிமனையில் (ஆட்டோ மொபைல் ஒர்க் சாப்) பணிபுரிதல்)

11. அப்பளம்தயாரித்தல்

12. வெளுத்தல்மற்றும்சாயத்தொழில்

13. மாட்டுவண்டிஓட்டுதல்

14. உணவுசமைத்தல்

15. தேங்காய்உரித்தல்

16. வனப்பொருட்கள்சேகரித்தல்

17. உணவுநிறுவனங்களில்பணிபுரிதல்

18. முந்திரித்தொழில்

19. ஆட்டோ, டாக்சி, வேன், டெம்போ, லாரி மற்றும் பேருந்து ஓட்டுதல் (அரசுத்துறை வாகனங்கள் நீங்கலாக)

20. எல்.பி.ஜி. சிலிண்டர் விநியோகித்தல்

21. சைக்கிள் ரிக்ஷா ஓட்டுதல்

22. பொறியியல் தொழில்

23. பட்டாசு மற்றும் தீப்பெட்டித் தொழில்

24. துணிமடிக்கும்தொழில்

25. காலணி மற்றும் தோல் பொருட்கள்தயாரித்தல்

26. சாக்குத்தொழில்

27. தங்க, வெள்ளி ஆபரணங்கள் தயாரித்தல்

28. கைத்தறி மறறும் கைத்தறிபட்டு நெய்தல்

29. அகர்பத்திதயாரித்தல்

30. துணி துவைத்தல் மற்றும் சலவை இடுதல்

31. பதநீர் இறக்குதல்

32. பேனா எழுது முனை தயாரித்தல்

33. மாவு ஆலை, எண்ணெய் ஆலை, பருப்பு ஆலை மற்றும் அரிசி ஆலையில் பணிபுரிதல்

34. அச்சகங்களில்பணிபுரிதல்

35. விசைத்தறித்தொழில்

36. தனியார்பாதுகாவல்பணிகள்

37. பிளாஸ்டிக்தொழில்

38. மண்பாண்டத்தொழில்

39. குப்பைகள்சேகரித்தல்

40. முடித்திருத்துதல் மற்றும் அழகு நிலையங்களில் பணிபுரிதல்

41. தெருவியாபாரம்

42. ஜவ்வரிசி தொழில்

43. செயற்கை வைரம் வெட்டுதல்

44. பட்டுப் புழுவளர்த்தல்

45. கடைகள் மற்றும் நிறுவனங்களில் பணிபுரிதல்

46. தையல் தொழில்

47. மரம் ஏறுதல்

48. தகர அடைப்பான்கள் தயாரித்தல்

49. பாத்திரங்கள் தயாரித்தல்

50. மரவேலைக் கூடங்களில் பணிபுரிதல்

51. வீட்டு வேலைகளில் பணிபுரிதல்

52. சைக்கிள்பழுதுபார்த்தல்

53. கல்மற்றும் பிறபொருட்களில் சிற்பவேலைகள் செய்தல்

54. களிமண், காகித கூழ் உட்படபிற பொருட்களில் கைவினைப் பொருட்கள்செய்தல்

55. சுருட்டுதயாரித்தல்

56. ஓவியர்கள்

57. ஒலிமற்றும்ஒளிஅமைத்தல்

58. எலக்ட்ரானிக் பொருட்கள் மற்றும் உபகரணங்களை பழுது பார்த்தல் மற்றும் சீர்செய்தல்

59. வார்த்துவடித்தல்

**வாரியங்களில் பதிவு செய்வதற்கான தகுதிகள் / வழிமுறைகள்:-**

1. விண்ணப்பதாரர் 18 முதல் 60 வயதுக்குள் இருத்தல் வேண்டும்.

2. தொழிலாளி தனது புகைப்படம் ஒன்றை விண்ணப்பத்தில் ஒட்டி, மற்றொரு புகைப்படத்தை ஒரு உறையில் வைத்து விண்ணப்பத்தை முழுமையாக பூர்த்தி செய்து தொழிலாளர் உதவி ஆணையர் (சமூக பாது காப்புத் திட்டம்) அலுவலகத்தில் அளித்து ஒப்புதல் சீட்டு பெற்றுக் கொள்ள வேண்டும்.

3. பதிவு கட்டணம் ஏதும் இல்லை.

4. பதிவு விண்ணப்பத்தில் சம்மந்தப்பட்ட தொழிலில் ஈடுபட்டுள்ளவர் என்பதற்கான சான்று கீழ்க்கண்ட எவரேனும் ஒருவரால் அளிக்கப்படவேண்டும்.

1. வேலையளிப்பவர்,

2. பதிவு பெற்ற ஒப்பந்ததாரர் (கட்டுமானவாரியம் மட்டும்).

3. கட்டுமானத் தொழிலில் ஈடுபடும் அரசு அமைப்புகள் அல்லது நிறுவனங்கள் (கட்டுமான வாரியம் மட்டும்).

பதிவுபெற்ற தொழிற்சங்கம்.

4. கிராமநிர்வாக அலுவலர்

(வருவாய்ஆய்வாளர் சென்னைமாவட்டத்தில்மட்டும்),

5. தொழிலாளர் உதவி ஆய்வாளர் அல்லது உதவி இயக்குநர், தொழிலகபாதுகாப்புமற்றும்சுகாதாரம் (தமிழ்நாடு உடலுழைப்புத் தொழிலாளர்கள் நலவாரியம் மற்றும் இதர 15 நலவாரியங்களுக்கு மட்டும்).

5. பதிவு விண்ணப்பத்தில், தொழிலாளர் செய்யும் வேலை குறித்த பணிச்சான்றினை தொழிற் சங்கம் வழங்கி யிருந்தால், தொழிற் சங்கப்பதிவு எண் மற்றும் முகவரி யுடன் கூடிய முத்திரை இடம் பெற்றிருக்க வேண்டும்.

6. வயது / இருப்பிடம் தொடர்பாக கீழ்க்கண்ட ஆவணங்களில் ஏதேனும் ஒன்றின் சான்றொப்ப மிட்ட நகலினை (Attested Copy) விண்ணப்பத்துடன் இணைக்க வேண்டும்.

7. பிறப்பு / இறப்புபதிவாளரின்சான்று.

8. பள்ளி அல்லது கல்லூரிச் சான்று

9. வாகன ஓட்டுநர் உரிமநகல்,

10. தேர்தல் ஆணையத்தால் வழங்கப்பட்ட வாக்காளர் அடையாள அட்டை,

11. சான்றொப்ப மிட்ட குடும்ப அடையாள அட்டை

12. அரசுமருத்துவரிடமிருந்து

(சிவில்சர் ஜன்தரத்திற்கு குறையாதவரிடம் பெறப்பட்ட வயது குறித்த சான்று அசலில்)

13. தேசிய மயமாக்கப்பட்ட வங்கி கணக்கு.

பதிவினைபுதுப்பித்தல்

ஐந்து வருடத்திற்கு ஒருமுறை பதிவினை புதுப் பித்துக்கொள்ளவேண்டும், புதுப்பித்தலுக்கு கட்டணம்ஏதும் இல்லை, 60 வயது நிறைவடைந்த தொழிலாளியின் பதிவினைபுதுப்பிக்கஇயலாது, உறுப்பினரால் அளிக்கப்படும் புதுப்பித்தல் விண்ணப்பம் தொழிலாளர்உதவிஆணையர் (சமூக பாதுகாப்புத் திட்டம்) அலுவலகத்தில்பெறப்பட்டு, உரிய சரிபார்த்தலுக்குப் பின்பு துப்பிக்கப்பட்டு அடையாள அட்டைஉறுப்பினருக்கு திரும்ப அளிக்கப் படும்.

இரண்டாம்படிஅடையாளஅட்டை (Duplicate I.D.Card)

இரண்டாம்படி அடையாள அட்டை வழங்கக் கோரும் மனு தொழிலாளரின் விண்ணபத்தின்மீ துவிசாரணை மேற்கொண்டு இரண்டாம்படி அடையாள அட்டை (Duplicate ID. Card) கோரும்நபர் அவர்தானா என உறுதி செய்து தொழிலாளர் உதவி ஆணையரால் (சமூக பாதுகாப்புத் திட்டம்) இரண்டாம்படி அடையாள அட்டை வழங்கப் படும். (இரண்டாம்படி அடையாளஅட்டைபெறரூ.20/ கட்டணம் செலுத்தி ரசீதுபெற்றுக் கொள்ள வேண்டும்).

பதிவு பெற்ற தொழிலாளர்களுக்கு நலத்திட்ட உதவிகள்

பதிவு பெற்ற தொழிலாளர்களுக்கு நலத் திட்ட உதவிகள்

திருமணம்

(குடும்பத்திற்கு இருமுறை மட்டும்) தொழிலாளர் (அ) தனதுமகன் (அ) மகள் திருமணத்திற்கு 3,000/(ஆண்) 5,000/ (பெண்)

மகப்பேறு

பதிவு பெற்ற பெண்தொழிலாளர்களுக்கு

(முதல் இரு குழந்தைகளுக்கு மட்டும்) 6,000/

கருக்கலைப்பு/ கருச் சிதைவு (பதிவுபெற்ற பெண் தொழிலாளர்களுக்கு இருமுறை மட்டும்) 3,000/

கல்வி

(ஒவ்வொரு கல்வி ஆண்டிற்கும்)

அ) 10ம்வகுப்புபடிப்பதற்கு (பெண்குழந்தை களுக்கு மட்டும்) 1,000/

ஆ) 11ம் வகுப்பு படிப்பதற்கு (பெண் குழந்தை களுக்குமட்டும்) 1,000/

இ) 12ம் வகுப்பு படிப்பதற்கு (பெண்குழந்தை களுக்கு மட்டும்) 1, 500/

ஈ) 10 ஆம் வகுப்பு தேர்ச்சி 1,000/

உ) 12 ஆம் வகுப்பு தேர்ச்சி 1,500/

ஊ) பட்டப்படிப்பு

முறையானபட்டப்படிப்பு 1,500/

விடுதியில்தங்கிப்படித்தால் 1,750/

எ) பட்டமேற்படிப்பு

முறையானபட்டமேற்படிப்பு 4,000/

விடுதியில்தங்கிப்படித்தால் 5,000/

ஏ) தொழிற்நுட்பப்பட்டபடிப்பு

சட்டம், பொறியியல்,

மருத்துவம், கால்நடை

மருத்துவம்போன்ற

தொழிற்நுட்பப்பட்டபடிப்பு 4,000/

விடுதியில்தங்கிப்படித்தால் 6,000/

ஐ) தொழிற்நுட்பப்பட்டமேற்படிப்பு 6,000/

விடுதியில்தங்கிப்படித்தால் 8,000/

ஒ) ஐ.டி.ஐ. அல்லது

பாலிடெக்னிக்படிப்பு 1,000/

விடுதியில்தங்கிப்படித்தால் 1,200/

கண்கண்ணாடி

ஒவ்வொரு ஆண்டும் ஒவ்வொரு மாவட்டத்திற்கும் முதலில்விண்ணப்பிக்கும் 65 தொழிலாளர்களுக்கு மட்டும். 500/க்குமிகாமல்

ஓய்வூதியம்

60 வயது நிறைவு செய்த பதிவு பெற்ற தொழி லாளி யாக இருக்க வேண்டும் அல்லது 60 வயதினை நிறைவு செய்யாதிருந்தாலும் பதிவு செய்திருந்து நோயின் காரணமாக வழக்கமான பணிசெய்ய இயலாமல் முடக்கம் ஏற்பட்டிருக்க வேண்டும். 1.000/ மாதம் ஒன்றிற்கு

குடும்ப ஓய்வூதியம்

ஓய்வூதியம் பெறும் கட்டுமானத் தொழிலாளி இறந்து விட்டால் அவரது கணவர் / மனைவிக்கு குடும்ப ஓய்வூதியம் 400/ மாதம்ஒன்றிற்கு

விபத்துமரணம்

(கட்டுமானத்தொழிலாளி 11.12.2014க்குபிறகு

பணியின் போது பணியிடத்தில் விபத்து மரணம் நிகழ்ந்தாலும், 01.03.2016க்கு பிறகு பதிவு பெறாத கட்டுமானத் தொழிலாளி பணியிடத்தில் இறந்தாலும்) 5,00,000/

01.03.2011க்குபிறகு பணியிடம் அல்லாத இடத்தில் விபத்தில் இறந்தாலும் 1,00,000/

விபத்து ஊனம்

உடல்உறுப்பு இழப்பு அல்லது உடல்உறுப்புது ண்டிக்கப்படுதல் அல்லது நிரந்தரமாகஉடல் உறுப்பு செயல் இழப்பு ஏற்பட்டால் ஊனத்திற்கு தகுந்தாற் போல் இழப்பீட்டுத் தொகை 1,00,000/வரை

விபத்து ஊன உதவித் தொகையினை தவிர ஊனத்தின் தன்மைக் கேற்ப செயற்கை உறுப்புகள் / சக்கர நாற்காலி தகுதியின் அடிப்படையில் வழங்கப் படும்,

இயற்கைமரணம்

நியமனதாரருக்குமட்டும் (17.11.2017 க்குபிறகு) 20,000/

ஈமச்சடங்கு

நியமன தாரருக்கு மட்டும் (17.11.2017 க்குபிறகு) 5,000/

நல உதவி விண்ணப்பத்துடன் இணைக்கப்பட வேண்டிய ஆவணங்கள்

பொதுவான ஆவணங்கள்

அசல் அடையாள அட்டை

வங்கிகணக்கு, ஆதார் அட்டை

திருமணம்

திருமண அழைப்பிதழ்

திருமணம் நடைபெற்ற தற்கான சான்று

திருமணம்செய்துகொள்பவர்

ஆண் எனில் 21 வயதும், பெண்எனில் 18 வயதும் நிறைவு செய்தார் என நிரூபிக்கும் வயது சான்றிதழ்,

மகப்பேறு

அசல் பிறப்பு சான்றிதழ்

குறைப்பிரசவம் / கருக்கலைப்பு எனில் பதிவு பெற்ற மருத்துவரின்சான்று. (உதவி சிவில் சர்ஜன் தரத்தில்)

கல்வி

1. கல்விபயிலும் ஆண்டிலேயே விண்ணப்பிக்க வேண்டும்.

2. பள்ளித் தலைமை ஆசிரியரிடமிருந்து பெறப்படும் படிப்பு சான்றிதழ் பதிவு பெற்ற தொழிலாளியின் மகள் என்றும் கல்விபயிலும் ஆண்டினையும் குறிப்பிட வேண்டும்.

3. சான்றொப்ப மிட்ட தேர்ச்சி பெற்றமதிப் பெண் பட்டியல் / பள்ளி மாற்று சான்றிதழ்.

4. கல்லூரி படிப்பில் சேர்ந்து பயில்வது குறித்தான கல்வி நிலைய முதல்வரிடமிருந்து பெறப்பட்ட அசல் சான்றிதழ்.

5. விடுதியில் தங்கி படிப்பவர் முதல்வரிடம் அல்லது விடுதி காப்பாளரிடம் இருந்து பெறப்பட்ட சான்று.

கண்கண்ணாடி

கண்மருத்துவரின்ப ரிசோதனைச் சான்று கண் கண்ணாடி வாங்கியதற்கான அசல் பற்றுச்சீட்டு

ஓய்வூதியம்

இரண்டு பாஸ்போர்ட் அளவு போட்டோ.

முடக்க ஓய்வூதியம்

இரண்டு பாஸ்போர்ட் அளவு போட்டோ, மருத்துவச் சான்று அரசு சிவில் சர்ஜனால் வழங்கப் பட்டது, (முடக்க ஓய்வூதியத்திற்கு மட்டும்)

குடும்ப ஓய்வூதியம்

இரண்டு பாஸ்போர்ட் அளவுே பாட்டோ ஓய்வூதிய தாரரின் அசல் இறப்பு சான்றிதழ், வாரிசு உரிமைச் சான்றிதழ்

விபத்து மரணம்

அசல் இறப்புசான்றிதழ், முதல்தகவல்அறிக்கை (FIR), பிரேதப் பரிசோதனை அறிக்கை.

விபத்துமரணம்

(உதவித் தொகை, உதவி உபகரணம்) மருத்துவச் சான்று பணித்திறன் இழப்புச் சான்று (உதவி சிவில் சர்ஜனால் வழங்கப்பட்டது) ஹாஸ்பிடல்டிஸ்சார்ஜ் சம்மரி முதல் தகவல்அறிக்கை (FIR)

இயற்கைமரணம், ஈமச்சடங்கு

அசல்இறப்புசான்றிதழ்.

நலத்திட்ட உதவிகள் வங்கி கணக்கில் செலுத்துதல் (ECS)

அரசாணை எண். 102, நாள் 08.11.2011 (தொழிலாளர் மற்றும் வேலை வாய்ப்புத்துறை) ன் படி இவ் வாரியங்களின் நலத்திட்ட உதவிகளுக்கான பணப் பயன்கள் நேரடியாக பதிவு பெற்ற தொழிலாளியின் வங்கி கணக்கில் செலுத்தப்படுகிறது.

மாண்புமிகு முதல்வர்அவர்களின் விரிவான மருத்துவ காப்பீட்டு திட்டம் :

இந்த காப்பீட்டு திட்டத்தில் ஒரு குடும்பத்திற்கு வருடம் ரூ.1,00,000/ வீதம் வழங்க வழிவகை செய்யப் பட்டுள்ளது. சிலகுறிப்பிட்ட சிகிச்சை முறைகளுக்கு ஒருவருடத்திற்கு ரூ. 1,50,000/ வரைவழங்கப்படும். இத் திட்டத்தில் 1016 சிகிச்சைமுறைகளுக்கும், 113 தொடர் சிகிச்சை வழிமுறைகளுக்கும் மற்றும் 23 நோய் பரிசோதனை கண்டுபிடிப்பு முறைகளுக்கும் வழி வகை செய்யப்பட்டுள்ளது. தமிழ்நாடு கட்டுமானம் மற்றும் இதர 16 அமைப்பு சாராத் தொழிலாளர்கள் நல வாரியங்களில் பதிவு பெற்ற தொழிலாளர்களும் இத் திட்டத்தில் நிபந்தனைகளுக்குட் பட்டு பயன்பெற வழிவகை செய்யப்பட்டுள்ளது.

தமிழ்நாடு கட்டுமானத் தொழிலாளர்களின் குழந்தைகளுக்கு நற்பெயர் பெற்ற தனியார் பள்ளிகளின் மூலம் உயர் கல்வி வழங்கும் திட்டம்:

அரசுப் பள்ளியில் கல்வி பயின்று, அறிவுக் கூர்மையான கட்டுமானத் தொழிலாளர்களின் குழந்தைகளுக்கு அந்தந்தப் பகுதியில் சிறந்தத னியார் பள்ளிகள் மூலம் தரமான கல்வி வழங்கும் வகையில் தமிழ்நாடு கட்டுமானத்தொழிலாளர் நலவாரியத்தில் பதிவு பெற்ற தொழிலாளர்களின் குழந்தைகளுக்கு சிறந்த தனியார்பள்ளிகளின்மூலம்ஆற ாம்வகுப்புமுதல் பன்னிரெண்டாம் வகுப்பு வரை தரமான கல்வி வழங்க தமிழக அரசு ஆணை எண்.14 தொ.வே, (ஐ1) துறைநாள் : 31. 01. 2017 வெளியிடப்பட்டுள்ளது.

பள்ளிக் கட்டணம் தனியார் பள்ளிக் கட்டண நிர்ணயக் குழுவால் நிர்ணயக்கப்படும் கட்டணத் தையும், விடுதிக் கட்டணம் ரூ. 15,000/ மற்றும் ஒவ்வொரு மாணவருக்கும் ஆண்டு ஒன்றுக்கு வழங்கப் படும்.

அலுவலக முகவரிகள் :

*1.தொழிலாளர்ஆணையர், டி.எம்.எஸ். காம்பவுண்ட்,*
*தேனாம்பேட்டை, சென்னை 600 006.*
*தொலைபேசி எண். 04428216529.*
*மின்னஞ்சல் முகவரி : comlabtn@gmail[dot]com.*

*2. கூடுதல்தொழிலாளர்ஆணையர்,*
*எண்.8, ஹாஜாமியான்தெரு, காஜாநகர், திருச்சி.*
*தொலைபேசி எண். 04312421433*
*மின்னஞ்சல் முகவரி : jcl_trichy@yahoo[dot]in*

***3. தொழிலாளர்இணைஆணையர்,***
*26, 3வதுதெரு, காஜாநகர், திருச்சி.*
*தொலைபேசிஎண். 04312420600*
*மின்னஞ்சல்முகவரி : dclssstryrn@gmail[dot]com*

***4. தமிழ்நாடு கட்டுமானத் தொழிலாளர்கள் நலவாரியம்,***

*8, வள்ளுவர்கோட்டம் நெடுஞ்சாலை, சென்னை 34.*
*தொலைபேசிஎண். 04428216527, 28216529*
*மின்னஞ்சல்முகவரி : tncwwbhead@gmail[dot]com*

***5. தமிழ்நாடு உடலுழைப்புத் தொழிலாளர்கள் நலவாரியம்,***

*ஜி/133, தமிழ்நாடு வீட்டு வசதி வாரியம்,*

*சிந்தாமணி சூப்பர்மார்க்கெட் வணிக வளாகம், அண்ணாநகர் (கிழக்கு), சென்னை.*

# இந்தியத் தேர்தல் முறை மீதான அம்பேத்கரின் பார்வை



1947இல், பிரட்டீசு அரசாங்கத்தில் இந்தியர்களுக்கு அதிகாரப் பரிமாற்றம் செய்வதற்குக் காரணமாக இருந்தவர்களில் முதன்மையானவர் அண்ணல் அம்பேத்கர். இந்தியாவின் பிரட்டீஷ் அரசாங்கத்தில், பெரும்பான்மைத் தேர்தல் முறை என்ற அதிகார வரம்பில், தாழ்த்தப்பட்ட மக்களுக்குத் தனி வாக்காளர் தேர்தல் முறை என்ற கோரிக்கை முன்வைக்கப்பட்டது. பிரட்டீசு அரசாங்கமும் தனிவாக்காளர் தொகுதி முறையை தாழ்த்தப்பட்ட மக்களுக்காக ஒதுக்கியது. ஆனால், மோகன்தாஸ் கரம்சந்த காந்தி, தாழ்த்தப்பட்ட மக்களுக்கு தனி வாக்காளர் தொகுதி முறை ஒதுக்கியதை எதிர்த்து சாகும்வரையில உண்ணா விரதம் மேற்கொண்டார். இதன் தொடர் நிகழ்வாக தாழ்த்தப்பட்ட மக்களுக்கான தனிவாக்காளர் தொகுதி முறை ரத்து செய்யப்பட்டு பூனா ஒப்பந்தம் நடைமுறைக்கு வந்தது நாம் அனைவரும் அறிந்த வரலாற்று உண்மையாகும்.

1949ஆம் ஆண்டு ஜனவரி 4இல் நடைபெற்ற சட்ட வரைவுக் கூட்டம் அப்போதைய நாடாளுமன்றத் துணைச் சபாநாயகர் டாக்டர் எச். சி. முகர்ஜி தலைமையில் தேர்தல் முறை குறித்ததான விவாதம் நடைபெற்றது. அவ்வமயம் உறுப்பினர் திரு. காஸி சையத் கரிமுதின் அவர்கள், சட்டப்பிரிவு 67, துணைப்பிரிவு (5) இல் உள்ள வார்த்தைகளை நீக்கிவிட்டு சரத்து 292 மற்றும் சரத்து 293 இல் “பலருக்கும் வாக்களிக்கும் வகையிலுள்ள பல உறுப்பினர்களைத் தேர்ந்தெடுக்கும் விகிதாச்சாரத் தேர்தல் முறை” என மாற்ற வேண்டுமெனக் கூறினார். அவரைத் தொடர்ந்து பீகாரைச் சார்ந்த உறுப்பினர் கே.டி.ஷா என்பவர் விகிதாச்சாரத் தேர்தல் முறையில் “ஒற்றை மாற்று வாக்கு” முறையைப் பின்பற்ற வேண்டும் எனக் கூறினார். இவர்களை ஆதரித்து மெட்ராஸ் முஸ்லிம் உறுப்பினர் திரு. மகபூப் அல் பெயக் என்பவரும் விகிதாச்சாரத் தேர்தல் முறைக்கு தனது ஆதவைத் தெரிவித்தார். இவர்களின் இத்தகைய விவாதத்தின்போது அம்பேத்கர் கூறிய பதில் பின்வருமாறு.

‘... இந்த விவாதத்தில் திரு. கரிமுதின் பேசிய எண் 1415 சட்டத்திருத்தம் மீதான விவாதத்திற்கு நான் பதில் கூற விழைகின்றேன். நண்பர் திரு. கரிமுதின் ஒற்றை மாற்று வாக்கு மூலம் விகிதாச்சார தேர்தல் முறையை நாடாளுமன்றம் மற்றும் அனைத்து மாநிலங்களுக்கும் நடத்த வேண்டுமென கூறியிருக்கிறார். ஆனால், அவர் கூறிய இக்கருத்தை நான் ஏற்கவில்லை. ஏனெனில் விகிதாச்சாரத் தேர்தல் அமைப்பை நிதானித்துப் பார்க்கையில் தற்போது நமது நாட்டின் சூழலுக்கு விகிதாச்சார தேர்தல் முறை ஏற்புடையதல்ல. எனது நண்பர் திரு. கரிமுதின் கூறிய விகிதாச்சாரத் தேர்தல் முறையை நடைமுறையில் பயன்படுத்தவதற்கு மிகப் பெரிய, பரந்த அளவில் கல்வி அறிவு தேவைப்படுகிறது. இன்னும் சொல்லப்போனால், விகிதாச்சாரத் தேர்தல் முறையைப் பயன்படுத்த ஒவ்வொரு வாக்காளருக்கும் எழுதப் படிக்கத் தெரிந்திருக்க வேண்டும். அப்படி இருந்தால் மட்டுமே வாக்குச் சீட்டில் வாக்காளர் தனது வாக்கை சரியாக பதிவு செய்ய முடியும். உலகிலேயே மிகக் குறைந்த அளவு கல்வி அறிவு பெற்றவர் இருப்பது நமது நாட்டில் மட்டுமே என



நினைக்கிறேன். எனவே மிக அதிக அளவில் கல்வி அறிவு பெறதாவர்களாக உள்ள நமது நாட்டு மக்கள் விகிதாச்சாரத் தேர்தல் முறையில் வாக்குச் சீட்டைப் பயன்படுத்த முடியாது. எனவே விகிதாச்சார தேர்தல் குறித்தான விவாதத்தை இத்துடன் முடித்துக் கொள்வோம்".

Ref: Proceedings for the constituent Assembly during discussion about electoral systems in india: Tuesday. The 4th jan 1949 (Pages 1233-1264)

ஆறு ஆண்டுகளுக்குப் பிறகு, 1955ஆம் ஆண்டு, அதாவது அம்பேத்கர் மரணமடைவற்கு ஓராண்டிற்கு முன்பு, தனிவாக்காளர் தொகுதிமுறை குறித்த தமது கருத்தை அம்பேத்கர் மாற்றிக் கொண்டார் எனக் கூறலாம். ஆனால், பெரும்பான்மையான அமைப்புகள் இதனை உணராமல் தனி வாக்காளர் தொகுதிமுறை குறித்து குரல் எழுப்பி வருகின்றனர். 27.08.1955 அன்று செட்யூல்ட் கேஸ்ட் பெடரேசன் தலைவராக பாபா சாகேப் டாக்டர் அத்பேத்கர் இருந்த போது, விகிதாச்சாரத் தேர்தல் முறை தேவை என்பதை வலியுறுத்தி நிறை வேற்றப்பட்ட தீர்மானம் பின்வருமாறு :

"தனிவாக்குரிமை அல்லது இடஒதுக்கீடு முறையை மீண்டும் கொண்டு வரக்கூடாது. தற்போதையை அரசியல் சட்டத்தில் கண்டுள்ள ஓர் உறுப்பினர் தொகுதி முறைக்குப் பதிலாக, வேட்பாளர் அனைவருக்குரிய வாக்குகளையும் வாக்காளர் ஒருவருக்கே அளிக்க இடம் தரும் வாக்குரிமையுடன் கூடிய பல உறுப்பினர் (இரண்டு அல்லது மூன்று பேர் Multi Member Consti tuency) தொகுதிகளை ஏற்படுத்தவது போது மானது. மொழிவாரி மாநிலங்கள் குறித்த சிறுபான்மை இன மக்கள் கொண்டுள்ள அச்சத்தை இது அகற்றும். டாக்டர் பாபாசாகேப் அம்பேத்கர் நூல்தொகுப்பு தொகுதி1, பக்கம் 251.

எனவே, மக்களாட்சித் தத்துவம் நிலைபெற, ஜனநாயக கட்டமைப்புகள் நேர்மையாக நடைபெற, கண்ணியமான தேர்தல் நடைபெற வேண்டும். இது சாத்தியமாக வேண்டுமெனில், விகிதாச்சாரத் தேர்தல் முறை நடைமுறைக்குக் கொண்டு வர வேண்டும் என்பது இத்தீர்மானத்தின் உள்ளீடாகும்.

இருப்பினும், தலித் அறிவு ஜீவிகள் விகிதாச்சார பிரதி நிதித்துவத் தேர்தல் முறை குறித்து எதிர்ப்பும் அதிருப்தியும் தெரிவிக்கின்ற நிலை உருவாகியிருக்கிறது. தலித் மக்களுக்கென ஒதுக்கப்பட்டத் தனித் தொகுதிகளின் நிலை என்னவாகும் என்பதில் அவர்களுக்குப் பெருத்த சந்தேகம் இருக்கிறது. தனித் தொகுதிகளை விகிதாச்சாரத் தேர்தல் முறை புறந் தள்ளும் என்ற அச்சம் அவர்களிடையே நீடிக்கிறது. ஆனால் இந்தியாவில் புதிய தேர்தல் முறையை, அதாவது விகிதாச்சாரத் தேர்தல் முறையை இந்தியாவிற்கு ஏற்ற வகையில் வடிவமைக்கிறபோது, தனித் தொகுதிகளையும் இடஒதுக்கீடுகளையும் உள்ளடக்கும் வாய்ப்பு அதிகமாக இருக்கிறது. விகிதாச்சாரத் தேர்தல் முறையைப் பயன்படுத்தும் பல நாடுகளில் இதுபோன்ற இடஒதுக்கீடுகள் ஏற்கனவே நடைமுறையில் உள்ளன.

இந்தியத் தேர்தல் நடைமுறைகளின் அவலப் போக்கினைக் கண்ட டாக்டர் அம்பேத்கர், 1952இல் அரசியல் இடஒதுக்கீட்டிற்கான எதிர்ப்புக் குரலை எழுப்பினார். இக்கருத்தை ஏற்றுக்கெண்ட குடியரசுக் கட்சி, இடஒதுக்கீடுகள் வேண்டாம் என்ற கருத்தை முன்வைத்து, டெல்லியில் நாடாளுமன்றத்தின் முன்பு 30.11.1959இல் ஐம்பதாயிரம் தொண்டர்கள் திரண்ட ஊர்வலத்தை நடத்தியது. அதே போன்று, 1955களிலேயே, தனித்தொகுதிகள் குறித்த தனது நிலையை மாற்றிக் கொண்டார்.

**பணி. வ. செபாஸ்டியன் ச.ச,**

வாக்குவங்கி அரசியல் என்ற நூலிலிருந்து...



# அவசியமில்லாமல் பழிக்கப்படும் அரிசி

புறநானூறு, தொல்காப்பியம் எல்லாம் பாடிச் சிறப்புற்ற அரிசி, இன்று பலருக்கும் 'ஆகாத' உணவு ஆகி வருகிறது. மெல்லிடை தேடும் எவரும், தூர நின்று பார்க்கும் சோறு இப்போது வீண் பழி பெற்று வரும் அமுது! ஜிம்னாஸியங்கள் வெறுத்து ஓடும் பொருள், "அரிசியா? எனக்கு வேணாம்ப்பா" என நவ நாகரீக, இளமைப் பட்டாளம் இளக்காரம் செய்யும் பொருளாகவும் ஆகி வருகிறது.

அரிசிதான் உடல் எடை கூட்டிடும் என்றால், பத்தாயிரம் ஆண்டுகள் வரலாறு எத்தனை குண்டர்களைச் சந்தித்திருக்கும்? சித்தன்ன வாசல் குகை ஓவியங்களிலோ... எந்த கோயில் சிற்பங்களிலோ உழைக்கும் கூட்டம் செல்லத் தொப்பையுடன் இருப்பதைப் பார்த்திருப்போமா? சர்க்கரை வியாதி குறித்த சங்கதிகள் இலக்கியத்தில் மட்டுமே ஏராளம் இருந்ததுண்டா? பின் எப்போது வந்தது இந்தத் தொப்பை?

'ஸில்க்கி பாலிஸ்' போட்ட வெளுத்த அரிசியினை அளவறியாமல் தின்று, டி20 மேட்ச் போன்ற பரபரப்பு வாழ்க்கையில் கனவில் மட்டுமே கடும் உடற்பயிற்சி செய்யும் கனவான்கள் மெல்ல வளர்க்கும் தொப்பைக்குக் கடைசியில் கண்டறிந்த முள்ளார் காரணம் அரிசி! பிரச்சனை நம் வாழ்வியலிலும், பரபரப்பிலும் உள்ளதே ஒழிய அரிசியில் ஒளிந்திருக்கவில்லை என்பதை அவர்கள் இன்னும் அறியவில்லை.

விளைந்த நெல்லை, மழலைப் பேத்திக்குக் கஞ்சி, வளரும் பிள்ளைக்குப் பச்சரிசி, வீட்டுப் பெரியோருக்குக் கைக்குத்தல் அரிசி, பாட்டிக்கு அவல், மாலைச் சிற்றுண்டியாக பொரி, இரவில் அரிசிக் கஞ்சி என ஒரே பருவத்தில் விளைந்த நெல்லைத் தேவைக் கேற்றபடி, தேவைப்படும் நபருக்கு ஏற்றபடி தயாரித்தது நம் பாரம்பரியம். வணிகத்திற்கு ஏற்றபடி விட்டமின் அரிசி, பூச்சிக்கு எதிரான அரிசி என மரபணு மாற்றம் செய்யவில்லை அவர்கள். போஸ்ட் ஹார்வெஸ்ட் டெக்னாலஜி எனப்படும் உற்பத்திக்குப் பின் செய்யப்படும் பக்குவப்படுத்தலில் தன் தேவைக்கேற்ற மாற்றம் செய்தனர் நம் முன்னோர்கள்.

ஏறத்தாழ 4 இலட்சம் அரிசி ரகங்கள் இந்தியாவில் இருந்ததாக பழம் பெரும் வேளாண் விஞ்ஞானி ரிச்சாரியா கூறுகிறார். ஒரிசா மாநிலத்தின் பூரி நகரில் உள்ள ஜெகன்னாதர் ஆலயத்தில் தினசரி இறைவனுக்குப் புதிதாய் விளைந்த நெல் சோறில் நெய்வேத்தியம் செய்யும் பழக்கம் இன்றும் உண்டு. ஆண்டு 365 நாட்களும் புதிய நெய்வேத்தியம் என்றால், எத்தனை

**‘வெளுத்ததெல்லாம் பால்?’ என நம்பும் நம்மவர்கள், கைக்குத்தலின் மகிமை புரியாது, பளபள என அரிசிக்கும் பாலிஷ் போட்டு வெளக்கடித்து, நல்லது பயக்கும் தவிட்டை குப்பை என எறிந்து விட்டனர். புழுங்கினால், பழுப்பு நிறம் அரிசிக்கு வருகிறது.**

**“ஏன் சோறு மல்லிகைப்பூ நிறத்திலல்லவா இருக்க வேண் டும்?’’ என்றும் புழுங்கள் அரிசியினை அறியாமையில் மறந்தும் வருகின்றனர்.**

*ரகங்கள் அப்பகுதியில் இருந்திருக்கும் என்று எண்ணிப் பாருங்கள். அரிசி ஒருவேளை வியாதி தரும் என்றிருந் தால் அந்தக் கலாச்சாரம் என்றோ காலாவதி ஆகி இருக்கு மல்லவா?*

*ஆனால் நடந்தது வேறு. இடைக்காலத்தில் அதிக மகசூல், வீரிய ஒட்டு ரகம் என்ற ஒட்டத்தில், தெரிந்தோ, தெரியாமலோ பன்னாட்டு வணிகப் பிடி யில் நம் பாரம்பரிய காடைகழுத்தான், குள்ளக்கார், குழியடிச்சான், மணிச்சம்பா என்ற அருமையான ரகங்களைத் தொலைத்து, இனிஷியல் அரிசியில் இன்று ஏமாந்து நிற்கிறோம். கூடவே, அறிவியல் அரிதாரம் பூசி வர இருக்கும் மரபணு மாற்றிய ‘தங்க அரிசி’ (விட்டமின் சி புகுத்தியது) அது நம் மரபையே பாதிக்கும். எத்தனையோ நோய்களை நம்முள் புகுத்தி விடும் என்ற அபாயம் பல்வேறு வல்லுனர் களாலும் எச்சரிக்கை செய்யப்பட்டாலும், பளபளப்பு சட்டை போட்டு வரும் அதன் சந்தைக்கும் காத்திருக்கேறோம்.*

*‘வெளுத்ததெல்லாம் பால்?’ என நம்பும் நம் மவர்கள், கைக்குத்தலின் மகிமை புரியாது, பளபள என அரிசிக்கும் பாலிஷ் போட்டு வெளக்கடித்து, நல்லது பயக்கும் தவிட்டை குப்பை என எறிந்து விட்டனர். புழுங்கினால், பழுப்பு நிறம் அரிசிக்கு வருகிறது. “ஏன் சோறு மல்லிகைப்பூ நிறத்திலல்லவா இருக்க வேண் டும்?“ என்றும் புழுங்கள் அரிசியினை அறியாமையில் மறந்தும் வருகின்றனர்.*

*புழுங்கல் கைக்குத்தல் அரிசி* Low glycemic *தன்மை கொண்டது.* Oryzinal *எனும் ஆன்ட்டி ஆக்ஸிடண்ட் பொருளைத் தன்னுள் கொண்டது. விட்டமின் பி. சத்து நிறைந்தது.“ லோ கிளைஸிமிக் தன்மை’, கைக்குத்தல் புழுங்கல் அரிசியில் கிடைப்பதால், அது இரத்தத்தில், சர்க்கரை அளவினை மெதுவாக ஏற்றி சர்க்கரை நோயாளிக்கு திடீர் சர்க்கரை உயர்வை* (hyper glycemia) *தடுக்கும். பல நீரிழிவு நோயாளிகள் இன்று அரிசை யைத் தவிர்த்து கோதுமை சப்பாத்திக்கு குடியேறுகின்ற னர்.*

*கோதுமைக்கும் அரிசிக்கும் கலோரி கணக்கில் பெரிய வேறுபாடு இல்லை. சொல்லப் போனால் அரிசி குளிடலச்சி. தமிழனுக்கு ஏற்றது. தமிழ் மண் ணில் வாழும் நபருக்கும் ஏற்றது. புரதப் பயன்பாட்டு* (PER Protein Efficiency Ratio) *அளவில், கோதுமையைக் காட்டிலும் சிறந்ததென உணவியல் அறிஞர்களே கூறுவர். பிரச்சனை அளவு தானே ஒழிய அரிசியில்லை. அளவைக் குறைத்து புழுங்கல் அரிசி சாப்பிட்டாலே நீரிழிவைக் கட்டுப்பாடாக வைத்திருக்க இயலும். இன்னும் சொல்லப்போனால், அரிசியை நாம் அப்படியே சாப்பிடப் போவதில்லை. ஊற்றும் குழம்பு, கீரையின் மூலம் அதன் சர்க்கரை சீரணிக்கும் வேகத்தை யும் பெருவாரியாகக் குறைக்க முடியும் என பல ஆய்வுகள் உறுதிப்படுத்துகின்றன.*

*பாலுக்குப் பின் கைக்குழந்தையின் முதல் உணவு அரிசிக் கஞ்சிதான். டப்பா உணவுகளுக்கு பழக்காமல் குழந்தையின் முதல் உணவிற்கு அரிசியுடன் பருப்பு (சிறுபருப்பு) சேர்த்த பசு நெய் அல்லது தேங்காய் எண்ணெய் துளியுடன் தருவது குழந்தை எடை சீராக உயரப் பெரிதும் உதவும்.*

*இளம் வயதினர், குறிப்பாய் மெல்லிடைக் கனவில், அரிசியைக் கண்டால் அலறுவது முட்டாள்தனம். அதைத் தவிர்த்து வெறும் கோதுமை உணவில் இருப்பது அவர்கள் கருப்பைச் சூட்டினை அதிகரிக் கும். வெள்ளைப்படுதல், மாதவிடாய்த் தொந்தரவு களை அதிகரிக்க வைக்கும். நாளும் சரியான புழுங்கல் அரிசியை கீரை, காய்கறிகளுடன் சேர்த்துச் சாப்பிடுவது அவர்கட்கு அவசியமான ஒன்று. தற்போது பெருகி வரும்* Polycystic ovariesa *கீரை சாதத்தின் லோ கிளை சிமிக் தன்மை மூலம் தவிர்க்க முடியும்.*

*சிகப்பரிசி அவல் ஒரு சிறப்புணவு! எடை கட்டுப் பட வேண்டும் என விரும்புபவர்கள் காலைச் சிற்றுண்டிக்கு அவலை அழைக்கலாம். இன்று வீட்டிற் குள் வேகமாக குடியேறும்* corn flakes, instand noodles *வகையறாக்களின் இனம் தெரியாத உட்பொருட் களைக் காட்டிலும் சாலச் சிறந்தது. என்ன, கொஞ்சம் மெனக்கட வேண்டும். நம்மவர், நம்வீட்டு குழந்தைகள் நல வாழ்விற்குத்தானே!*

*அரிசி என்றதும் நாம் அனைவரும் நெல்லரிசியைத் தான் நினைவில் கொள்கிறோம். வாரம் மூன்று நாட்கள் தினையரிசி, கம்பரிசி சோறு சாப்பிடுவதும் சிறப்பு. தினை ஒரு சிறுதானியம். கண்ணுக்கு வன்மை தரும் பீட்டா கரோட்டின்கள் நிறைந்தது. அதிகப் புரதம் கொண்டது. கம்பரிசி இரும்புச் சத்து நிறைந்தது. மறந்து போன இந்த சிறுதானியங்கள் நலம் பயக்கும்*

Functional foods என்கிறது நவீன உணவு அறிவியல்.

நாம் சாப்பிடும் உணவின் மீதான அத்தனை உண்மையும் நாம் அறிந்திருப்பது நம் கடமை. மெக்ஸிகோ சோளத்தில் தயாரான corn flakes, எங்கோ எதுவோ எப்போதோ பீச்சிய பால்(?), சண்டிகர் கோதுமையின் சப்பாத்தி, ஐரோப்பா ஆப்பிளில் சாலட், வளர்ந்து விட்ட நாடுகள் கழித்து ஒதுக்கிய junk foods (gloabalise) இல் மாலைச் சிற்றுண்டி என நம் வீட்டு அடுப்பங்கரையும் மெல்ல உலகமயம் ஆகி வருகிறது. வணிக உத்திகளில் வசப்பட்டு, பரபரப்பு வாழ்வில் பிடிபட்டு, உணவின் மீதான அக்கறையைத் தொலைப் பது ஆபத்தானது. “எதைத் தின்றால் பித்தம் தெளியும்” என்ற நிலை வராதிருக்க, “எதைத் தின்கிறோம்?'' என்ற அக்கறை அவசியம் தானே!

ஏறத்தாழ 105 மில்லியன் பரம ஏழைகள் பசியுடன், கிட்டத்தட்ட 1.02 பில்லியன் ஊட்டச் சத்தில்லாத குழுந்தைகளும் இவ்வுலகில் இருப்பதாக ஐ.நா அமைப்பு கூறுகிறது. உலக வரலாற்றில் ஒரு பில்லியனுக்கு மேலாக ஊட்டச் சத்தில்லாத குழந்தைகள் இருப்பது இதுவே முதல் முறையாம். 200608 ஆண்டுகளில் கிட்டத்தட்ட 4080 விழுக்காடு விலை உயர்வு அனைத்தத் தானியங்களிலும் ஏற்பட்டிருப்பதும், 2008, 2009இல் ஏற்பட்ட தொடர்ச்சியான சந்தை சரிவு களும் தான் இந்தப் பசிக்கும் வறுமைக்கும் காரணம்.

பசியைப் போக்கவும் வறுமையைப் போக்கவும் எனக்கூறி உள் நுழையும் மரபணு மாற்றிய பயிர்த் தொழில் நுட்பம் முழுமையாய் இந்தியாவை அடிமைப் படுத்தவும், விவசாயிகளை நிரந்தர கொத்தடிமைகளாகவும் வைத்திருக்க முனையும் திட்டங்கள்தானே தவிர வேறேதும் அல்ல. முன்பு இது போல் ‘பிச்சை கோதுமை வேண்டாம் உங்களுக்கு. வீரிய மகசூல் ரகங்களைத் தருகிறோம்’ என்று உள்வந்த இனிஷியல் தானியங்களும் அதன் உடன் வந்த பூச்சிக்கொல்லிகளும் நம்மையும் நம் மண்ணையும் என்ன ஆக்கியது என்று நம் அனைவருக்கும் தெரியும். இப்போது இன்னும் வலிமையாய் மறு சுழற்சிக்கு வாய்ப்பே இல்லாத கேடுகளுடன் மரபணு மாற்றிய பயிர்கள்.

காஷ்மீர் முதல் கன்னியாகுமரி வரை பெருவாரியாக பயன்படுத்திவரும் பத்தாயிரம் ஆண்டு பாரம்பரிய சாமானியனின் உணவைச் சிதைக்கக் காட்டும் அக்கறை ஏன் வேறெதிலும் நடக்கவில்லை. இன்னும் இதன் வரிசையில் மான்சாண்டோவின் தொழில் நுட்பத்தில் பி.டி.பப்பாளி, பி.டி.அரிசி, என வரிசையாய் மரபணு மாற்றப்பட்ட பயிர்கள் சந்தைப் படுத்தப்பட உள்ளன. பன்னாட்டு வணிகப் பிடிக்குள் நாட்டு இறையாண்மையை அடகு வைக்கும் நிலைப்பாடா நெருக்கடியான நிலையிலும் உணவு உறுதிப் பாட்டை அடைதல் எனும் சூளுரைக்கு இந்தியாவின் பதில்? வெந்த புண்ணில் வேல்பாய்ச்சும் இந்தச் செயல் பாடு இந்திய விவசாய வரலாற்றில் பெரும் தலைக் குனிவு.

டாக்டர்.ஜாக்யூஸ்டியோஃப், ஐநாவின் உணவு, விவசாய அமைப்பின் தலைவர் உலக உணவு தினச் செய்தியில், ‘உலகமயமாக்கம் முன் எப்போதும் இல்லாதபடி வேகமாய்ப் பசியினை, ஊட்டச் சத்தில்லா கூட்டத்தை உருவாக்கி விட்டது. வளர்ந்து வரும் நாடுகள், பசியில் உள்ள நாடுகள் எல்லாம் வணிகத்தில், வேளாண் சந்தையில் பெரும் நாடுகளைச் சார்ந்திருப்பதும், உலகப் பொருளாதார சரிவும் சேர்ந்து தான் முன் எப்போதும் இல்லாத பசித்தோர் எண்ணிக்கை உயர்வை உண்டாக்கி விட்டது,” என்கிறார். தேவையா, இந்த உலகமயமாக்கம்? என்று பலரும் கேள்வி எழுப்பிய போது புறக்கணித்த அரசு இப்போதேனும் விழிக்குமா?

நமக்குத் தேவை தன்னிறைவான ஆரோக்கியம் தரும் உணவு உற்பத்தி, விவசாயிகளுக்கு விலை நிர்ணயிக்கும் உரிமை. ‘நான் என்ன சாப்பிட வேண்டும்? எனக்கு என்ன நோய் வர வேண்டும்? நோய் வந்தால் என்ன மருந்து நான் எடுக்க வேண்டும்?’ இன்னொரு பணக்காரன் தீர்மானிக்கும் உறவைப் பேணும் மனோபாவம் எதற்கு நமக்கு?

டிராக்டரை அறிமுகப்படுத்த 1930 களில், இந்திய அரசு விவாதித்துக் கொண்டிருந்தபோது, காந்தியின் பொருளாதார ஆலோசகர் தமிழகத்தைச் சேர்ந்த ஜோசப் கொர்னலியஸ் குமரப்பா (ஜே.சி.குமரப்பா) சொன்னதை இங்கே நினைவில் கொள்ள வேண்டும். ‘டிராக்டர் நல்லாத்தான் உழும், ஆழமாகக்கூட உழும்! ஆனால் சாணி போடாதே!’ என்றார். எங்கே போனது இது போன்ற சிந்தனைகள்? நாளை குறித்த தெளிவான விழிப்பும், நேர்மையான பரவலாக்கப்பட்ட வளர்ச்சியும் திட்டமிடப்படாத வரை நம் உணவு உறுதிப்பாடு என்பது வெறும் பகல் கனவுதான்.

மருத்துவர் **கு.சிவராமன்.**

(எது சிறந்த உணவு என்ற புத்தகத்திலிருந்து)


## விளம்பரக் கட்டண விபரம்

**முன்னட்டை உள்ளே ரூ.** 10,000/-
**(முழுப்பக்கம்)**

**பின்னட்டை உள்ளே ரூ.** 10,000/-
**(முழுப்பக்கம்)**

**பின்னட்டை ரூ.** 15,000/-
**(முழுப்பக்கம்)**

**கருப்புவெள்ளை ரூ.** 7,000/-



# மவுலானா மகம்மதலியும் வகுப்புவாரி பிரதிநிதித்துவமும்

ஸ்ரீமான் ஸ்ரீநிவாச சாஸ்திரியார் அவர்கள் சமீபத்தில் தனது பத்திரிகையில் "மவுலானா மகம்மதலி அவர்கள் மகாத்மா காந்தியுடன் கொஞ்சக் காலம் தேசீய நோக்கத்தோடு வேலை செய்த பிறகு, மறுபடியும் தன்னுடைய பழைய குணப்படி இந்து முஸ்லிம் வேறு பாட்டைக் கருதுகிறார்'' என்று எழுதியதற்கு விடையாக மவுலானா அவர்கள் எழுதிய கீழ்க்கண்ட பாகத் தைத் தமிழர்களுக்கு அறிவுறுத்துகிறோம்.''

"வகுப்புவாரி பிரதிநிதித்துவமானது ஏட்டுச் சரைக்காய் அல்லவென்று சாஸ்திரியாருக்கு நான் வெளிப்படையாய்ச் சொல்லுகிறேன். நம்முள் குறைந்த தொகுதியாயுள்ள வகுப்பாருக்கு நம்மிடத்திலுள்ள அவநம்பிக்கையும், நாம் முற்காலத்தில் செய்த அநீதிகளுடைய கர்ம பலனும்தான் இவ்வகுப்புவாரி பிரதிநிதித் துவமென்று நாம் ஒப்புக்கொள்ளவேண்டும். அவநம்பிக்கை ஏற்படுகிற இடங்களில் வகுப்புவாரி பிரதிநிதித்துவம் கொடுத்தே தீரவேண்டும். ஸ்தல ஸ்தாபனங்களென்றாவது பள்ளிக் கூடங்க ளென்றாவது இக்கொள்கையை விட்டுக் கொடுக்க முடியாது."

ஆனால், இவ்அவநம்பிக்கை எவ்வளவு காலம் நீடித்திருக்க வேண்டுமென்பது பெருவாரியான மற்ற சமூகங்களின் கையில் தானிருக்கிறது. முதலாவதாக, இந்துக்கள் தங்கள் மதத்தைச் சேர்ந்த தாழ்நத வகுப்பாரென்று கருதப்படுகின்றவர்களை மனிதர் களாகவும், சகோதரர்களாகவும் நடத்தக் கற்றுக் கொள் ளட்டும். தேசீயத்திற்குப் பெரும் பகையான ஜாதி என்னும் பேயை அவர்கள் அடியோடு ஓட்டட்டும்.

ஒரு முசல்மானின் தாழ்ந்த நிலை தங்களுடைய தாழ்மை தான் என்று கருதி தேசீய முயற்சியினால் அத்தாழ்மை உயர்த் தப்பட வேண்டுமென்றும், இந்துக்கள் மாத்திரம் முற்கோக் கடையாமல் தேசமே முற்போக்கடைய வேண்டுமானால், இந்துக்கள் இந் நோக்கத்துடன் பாடுபடவேண்டுமென்றும் அவர்கள் காட்டட்டும். அப்படிக் காட்டினால் ஒரு முசல் மானாவது தனிபிரதிநிதித்துவம் கேட்க மாட்டா னென்று சாஸ்திரியாருக்கு உறுதி கூறுகிறேன்."

சாஸ்திரியாரும் மற்றும் சரி இந்து மக்களும் வகுப்புவாரி பிரதிநிதித்துவத்திற்கு ஒரு தடவை இடங் கொடுத்தால் அது எந்நாளும் மறையாமல் வளர்ந்து தேசீயத்தைக் கெடுக்கும் என்று சொல்லுகிறார்கள். ஆனால், சிறுபான்மையோருடைய அவ நம்பிக்கையா லேற் பட்ட இவ்வகுப்புவாரி பிரதிநிதித்துவம் அந்த அவ நம்பிக்கைக் காரணமில்லை என்று இந்துக்கள் வாக்கினாலாவது செய்கையினாலாவது என்றைக்கு நிரூபிக்கின் றார்களோ, அன்றே இவ்வகுப்புவாரி பிரதிநிதித்தவம் மறைந்து விடும். தங்கள் மதத்தினர்க்கு நன்மை தேடிக் கொண்ட இந்துக்கள் படிப்பிலும் செல்வத்திலும் தாழ்மை அடைந்திருக்கும் முஸலிம் களுக்கு என்ன நன்மை செய்தார்களென்று தேடிப் பார்க்கட்டும். உண்மையில் இந்துக்கள் தேசத்தைவிட தங்கள் மதத்தையே முக்கியமாகக் கருதுகிறார்கள்.

மேலும் தங்கள் மதத்தைவிட தங்கள் ஜாதியையே பிரதானமாகக் கருதுகிறார்களென்றும் சொல்லுவேன். நமது சாஸ்திரியாரின் இனத்தவர்கள் தங்களுடைய ஜாதி அபிமானத்தை வெளிக்காட்டிக் கொள்ளவிட்டாலும் இவ்விசயத்தில் மற்ற இந்துக்களைப் போலவே நடந்து கொள்ளுகிறார்கள். நான் ஒரு இந்துவாயிருந்து சாஸ்திரியாரைப்போல் 'தேச ஊழியன்' என்ற பெயர் வைத்துக் கொண்டேனேயானால் இந்தியன் என்னும் முறையிலும்  தேச ஊழியன் என்னும் முறையிலும் நம் தேசத்தில் தாழ்த்தப்பட்ட வகுப்பினர்க்கு ஊழி யஞ்செய்து அவர்களை உயர்த்தவும், சிறு தொகையினராகியவர்களை மற்ற சமூகத் தாரைப் போல் நல்ல ஸ்திதிக்கு கொண்டு வரப் பாடுபட்டும், அவர்கள் நம்பிக்கையைப் பெறுவேன். ஒரு சங்கிலியின் பலம், அதில் பலம் குறைந்திருக்கும் ஒரு கொக்கியின் பலத்தை விட அதிகமல்ல. இவ்வுண்மை இந்து தலைவர்களில் அநேகருக்கு இன்னும் புலப்படவில்லை. நமது ராஜீய வாழ்க்கையில் போட்டி வலுத்திருக்கிறது. பலகீனர்களை ஆதரிப்பாரில்லை. ஒரு இந்து குடும்பத்தில் சரீர திடமுள்ளவன் தனக்காகவல்லாது அக்குடும் பத்தின் பலகீனருக்காகவே பாடுபடுகிறான். இக்குலதர்மத்தை ஹிந்துக்கள் தங்கள் ராஜீய வாழ்க்கை யிலும் நடத்தினால்தான் நன்மை பயக்கும்.

இப்பொழுது சாஸ்திரியாருடைய மாகாணத்தில் பிராமணரல் லாதார் வகுப்புவாரி பிரிதிநிதித்துவத்தை தழுவி நிற்கிறார்கள். முசல்மான்களை மாத்திரம் குறைகூற இடமில்லை. முஸ்லிம் களுக்கு அநீதி வழங்கப் படும் வட இந்தியாவில், முஸ்லீம்கள் வகுப்புவாரி பிரதி நிதித்துவம் கோருவதும், பிராமணராக்கத்தினால் பிராமணரல்லாதாருக்கு அநீதி வழங்கப்படும் தென் னாட்டில் பிராமணரல்லாதார் வகுப்புவாரி பிரதி நிதித்தவம் கேட்பதுவும், இவ்வநீதிகளின் கர்மபலன் தானென்று சொல்ல வேண்டும். இவ்வுண்மையை எந்த இந்துவாவது மறுக்க முடியமாவென்ற நான் கேட்கிறேன். ஜாதி வேறுபாடென்னும் அக்கிரமத்தைக் கையாண்டு தீண்டாமை, நெருங்காமை என்னும் அநீதி களை ரட்சித்து வரும் ஒரு சமூகத்தார் தாங்களிழைக்கும் குற்றங்களைத் திருத்தாமல் தாங்கள்தான் தேசீய நோக்கமுடையவர்களென்று பெருமை பேசி மற்றவர்களை குறுகிய நோக்கமுடையவர்களென்று இழிவுபடுத்துவது சகஜம். நான் இவ்வுண்மையைப் பல தடவையெடுத்துச் சொல்லியும் என்னையும் முஸ்லிம்களையும் எதிர்க்கிறார்கள், ஜாதி அபிமான முள்ளவர்களின் குறுகிய நோக்கத்தைக் காண்கின்றார் களில்லை.

**பெரியார்**

குடியரசு கட்டுரை 31-01-1926.

# இவர்போல யாரென்று

இவர்போல அவரென்று
ஏன்கூற வேண்டும்?
இவரென்றும் இவராக
இவ்வுலகில் சிறந்திட
எண்ணற்ற செயல்வேண்டும்!

புத்தரைப் போல்வர இங்கொரு
போதிமரத்தடி வேண்டும்! – நல்ல
சித்தரைப் போலொரு
தேர்ந்த மருத்தவர்
சிறந்து விளங்கிட வேண்டும்! – நல்ல
சேவைகள் செய்திட வேண்டும்! – தான்
தேவைகள் குறைத்திட வேண்டும்!

நித்தமோர் சிந்தனை
நெஞ்சில் மலர்ந்திட
புத்தம் புதியதோர்
புதுமை படைத்திட வேண்டும்!
பத்தொடு பதினொன்றாய்
இத்தோடு முடிந்ததெனும்
இழிநிலை மாறவேண்டும்!

உத்தமர் காந்தியின்
உன்னத சிந்தனை
உலகம் அறிந்திட வேண்டும் – அதன்
உண்மைகள் உணர்ந்திட வேண்டும்!

தத்துவ ஞானிகள்
தந்தநல் போதனை
சார்ந்து நிற்க வேண்டும்!
வித்தகராகி விளங்கிச் சிறந்திடத்
தத்தம் திறமையால்
சாதனை செய்திடல் வேண்டும்!

அன்னை தெரசாவின்
அரிய தொண்டினை
ஆற்றிடும் செயல்வேண்டும் – அதை
ஏற்று நடக்கவேண்டும்?

கல்பனா சாவ்லா
கண்ட கனவினைக்
கருத்தினில் கொளல் வேண்டும் – விண்
கோள்களில் இறங்கி நாம்
கால்கள் பதிக்க வேண்டும்
சுனிதா வில்லியம்சின்
தொண்டினைத் தொடர்ந்து – பல
அனிதாக்கள் வரவேண்டும்
நற்சேவைகள் செய்தவர்
நாட்டிற்குப் பெருமைகள்
நாளும் சேர்க்க வேண்டும்
ஆற்றும் செயல் யாவும்
அறிவியல் கூட்டியே பணி
ஆற்றும் திறன் வேண்டும்!

பாரதி கண்ட
கனவினைப் பெண்கள்
காலடிச் சுவடாய்
பதித்திட வேண்டும்– வரும்
காலங்கள் இளைஞர்க்கு – வழி
காட்டியாய் இருக்க வேண்டும்

தந்தை பெரியாரின்
சிந்தனைத் தொண்டினை
சார்ந்து நிற்க வேண்டும் – இச்
சமுதாயச் சீர்கேடு
தந்திடும் அந்த
சாதிகள் ஒழியவேண்டும் – நல்ல
சமுதாயம் மலர வேண்டும்

அண்ணாவின் சிந்தனை
எந்நாளும் மனத்தினில்
ஏற்று நடக்க வேண்டும் – அதைப்
போற்றியே கருத்தாழம்
கண்டு படிக்க வேண்டும் – அதைக்
கொண்டு நடக்க வேண்டும்

அம்பேத்கார் சட்டத்தை
அவமதிக்கும் கூட்டத்தை
அறவே ஒதுக்க வேண்டும்
அடிமை விலங்கினைத்
தகர்த்தே அனைவரும்
சமமெனக் கொளல் வேண்டும்.

தேவைகள் மறந்து
சேவைகள் செய்வாரைத்
தேர்ந்து எடுக்க வேண்டும் – அவர்
செயல்கண்டு போற்ற வேண்டும் – நல்ல
விருதுகள் வழங்கவேண்டும்
விழிப்புணர்வு ஊட்டவேண்டும்
மக்கள் சேவைதான்
மகேசன் சேவையெனும்
மனிதரைக் காண வேண்டும் – அவர்
மாண்பினை உணர வேண்டும்.

இக்குலம் தமிழ்க்குலம்
என்றும் தழைத்தோங்க
ஏணியாய் இருக்க வேண்டும் – நல்ல
தோணியாய் அமையவேண்டும் – என்றும்
தொண்டுள்ளம் கொண்டே – பணி
ஆற்றிடும் குணம் வேண்டும் – அவரும்
சுயநலம் தவிர்க்க வேண்டும்

இவர் என்றும் இவராக
இருந்து செயலாற்றி
இப்புவி காக்க வேண்டும்
இவர்போல் பணிசெய்ய
இனிவரும் காலத்தில்
யார் வருவாரென?
இப்பவி கேட்கவேண்டும்!

கவிஞர். **இராமன்,**
சென்னை 24.



# நாடகக் கொட்டாய் முதல்... சினிமாக் கொட்டாய் வரை!

4



## “திருச்சிக்கு ஒரு வாக்கிங்”

பூவை தயா

முழுக்க முழுக்க முழுநீள நகைச்சுவை நாடகமாக உருவாகியது ‘திருச்சிக்கு ஒரு வாக்கிங்’ இந்த நாடகத்தை நானும் நண்பர் பாபுவும் இணைந்து இயக்குவதாக முடிவெடுத்தோம்.

முதலில் துண்டுப்பிரசரம் அடித்து பப்ளிசிட்டி செய்யத் திட்டமிட்டோம்... பூவைதயாவின் கதை வசனத்தில் தயாபாபுவின் இயக்கத்தில் ‘லிட்டில் ப்ளவர் ஸ்டேஜ்’ வழங்கும் ‘திருச்சிக்கு ஒரு வாக்கிங்’ என்று அச்சிட்டு அமெச்சூர் நாடகங்கள் நடக்கும் தியேட்டருக்கெல்லாம் சென்று துண்டுப் பிரசுரம் கொடுத்தோம்.

நாடகத்தின் கதை இதுதான். ஒரு செல்வந்தர், தன் மகள், மகன், மருமகள் யாவரையும் அழைத்துக் கொண்? சென்னையிலிருந்து திருச்சி உச்சிப்பிள்ளையார் கோவிலுக்கு நடந்தே வருவதாக நீண்டகால ஒரு பிரார்த்தனை... அதை நிறைவேற்ற பயணப்படுகிறார்கள். வழியில் நடக்கும் பல ருசிகரமான சம்பவங்களை நகைச்சுவையாக சொல்லப்பட்டதுதான் ‘திருச்சிக்கு ஒரு வாக்கிங்’ இந்நாடகத்திலும் பாவுவே கதாநாயகனாகவும், பாபுவின் அக்கா வேடத்திற்கு... சொந்த அக்காவான நடிகை உஷாஸ்ரீயே முடிவானது. எதையும் பொத்திவைக்காமலும் ஒத்தி வைக்காமலும் ஒத்திகை, ஓய்வின்றி நடந்து கொண்டேயிருந்தது.

இந்நாடகத்திற்கு இசையமைக்க கே.சி.சுவாமிநாதன் (நடிகர் சொக்கலிங்க பாகவதரின் புதல்வர்) அவர்களை ஒப்பந்தம் செய்தோம். நாடகத்தை அரங்கேற்றிட தி.நகர் வாணிமகாலை ‘புக்கிங்’ செய்திருந்தோம். மிகச்சிறிய அளவிலும் எளிமையான முறையிலும் சுவரொட்டி அடித்தோம். நாடகத்திற்கு இரு தினங்களுக்கு முன்னால் நானும் பாபுவும் நண்பர் ராஜேந்திரனும் ஆளுக்கொரு சைக்கிளில் பசைபக்கெட்டுடன் ஆழ்வார்ப்பேட்டை, தி.நகர், கோடம்பாக்கம் என இடங்களைத் தேர்வு செய்து சுவரொட்டியை ஒட்ட புறப்பட்டோம்.

அன்றைய காலகட்டத்தில் சினிமா தியேட்டர்களில் பிரதி வெள்ளிக்கிழமை தோறும் படங்கள் மாறும். புதன்கிழமை இரவுதான் ‘போஸ்டர்’ ஒட்டுவார்கள். அதே புதன்கிழமை இரவு நாங்கள் ஒட்ட நினைத்த இடத்தில் எல்லாம் சினிமா போஸ்ட்டரையும் ஒட்டிக் கொண்டிருந்தார்கள். போஸ்ட்டர் எங்கெங்கு ஒட்டப்படும், எப்போது ஒட்டப்படும் என்பதை தொன்று தொட்டே நன்கு அறிந்து வைத்திருந்த மாடுகள், கூட்டம் கூட்டமாக வந்து, ஒட்டிய போஸ்ட்டரை ஈரப்பதத்துடன் மிச்சம் மீதி வைக்காமல் சாப்பிட்டுக் கொண்டிருந்தது. நாங்கள் கொஞ்சம் யோசித்தோம். நண்பர் பாபு மாடுகளிடம் “இதோ பாருங்க... நாங்க ஒட்டுறது சின்ன பிட் நோட்டீஸ், இதை சாப்பிட்டு உங்க பசி அடங்கப் போறதில்லே பார்த்துச் சாப்பிடுங்க“ என்று, அன்று சொன்னது இன்றும் என் நினைவில் நன்றாய்ப் பதிந்துள்ளது. பின்னர் வேறு வழியின்றி கொஞ்சம் உயரமாக ஒட்டி, ஒட்டியதை நாங்களே ரசித்துப் பார்த்தோம்.

“என்ன தயா, போஸ்டர் எப்படி இருக்கு?“ என்று பாபு கேட்க... “தப்பு பண்ணிட்டோம் பாபு, சைஸ் இன்னும் கொஞ்சம் பெருசா இருந்திருக்கணும். பயோரியா பல்பொடி போஸ்டர் மாதிரியே இருக்கு“ என்று நான் சொன்னதும், “ஆமா தயா, அதுக்கும் இதுக்கும் வித்தியாசமே தெரியலை. கலர்ல போட்டிருந்தாக்கூட தப்பிச்சிருக்கலாம்“ என்றார் ராஜேந்திரன். “சரி... இது நமக்கு ஒரு பாடம் என்று கூறி பனகல் பூங்கா அருகே வந்து, அங்கே உள்ளே வைத்திருந்த நான்கு போர்டுகளிலும் அதில் உள்ள எழுத்தை மறைத்து நாங்கள் ஒட்டி முடித்ததும் ‘ஒரு குரல்

எங்களை அழைத்தது திரும்பிப் பார்த்தால்... பாண்டி பஜார் காவல் நிலைய சப்.இன்ஸ்பெக்டர். அப்போது நள்ளிரவு இரண்டு மணி. "பசங்களா ஒட்டுனதை பிச்சிட்டு என்கூட வாங்க" என்றார். நாங்கள் அந்த நாலு பிட் நோட்டீசையும் அகற்றி விட்டு அவருடன் ஸ்டேசன் சென்றோம்.

அரை மணி நேரமாக ஸ்டேசனில் உட்கார்ந் திருந்தோம். மணி இரண்டைத் தாண்டியதில், களைப்பும் தூக்கமும் கண்ணைக் கட்டியது. அச்சமயம் எங்களுக்கு டீ வந்தது. "முதல்ல டீயை சாப்புடுங்க. ஆமா, அதென்ன 'திருச்சிக்கு ஒரு வாக்கிங்' காமெடி நாடகமா" என்றார். நான் ஆமாம் என்றேன். "நானும் சின்ன வயசுல நாடகத்திலே நடிச்சிருக்கேன்" என்று பெருமிதமாய்க் கூறியவர்... "அந்தக் கதையைக் கொஞ்சம் சுருக்கமா சொல்லுங்க" என்றார். அவர் கதை கேட்ட நேரம் மூன்று மணி. 'கதையைக் கேக்காம ஏதாவது பனிஷ்மெண்ட் குடுத்திருந்தாக்கூட நிம்மதியா அங்கேயே படுத்திருப்போம். வேறு வழியில்லாமல் சீன் பை சீனாக கதையைச் சொன் னேன். "நாடகம் என்னைக்கு, வெள்ளிக் கிழ மையா? முடிஞ்சா நான் வர்றேன்" என்றவர், "பசங்களா போர்டை மறைச்சு நோட்டீஸ் ஒட்டுறது தப்பு" என்று அறிவுரை வழங்கி அனுப்பி வைத்தார்.

நாங்கள் மிச்சம் மீதி உள்ள போஸ்டரை வரிசையாக ஒரே இடத்தில் ஒட்டிவிட்டு, அவரவர்கள் வீட்டிற்குப் புறப்பட்டோம்!

1982 வெள்ளிக்கிழமை மாதம் நினைவில் இல்லை. வாணிமகால் ஒப்பனை அறையில் எல்லோரும் ஆயத்தமாகிக் கொண்டிருந்தார்கள். மணி ஆறு. கூட்டம் சேர்ந்து விட்டது. டிக்கெட்டில் 6:45க்கு நாடகம் தொடங்கும் என்று போட்டிருந்தோம்.

நான் பாபுவிடம் "பாபு கூட்டம் வந்துருச்சி, நீங்க எல்லாரும் தயாராயிருக்கீங்க. என் மக்களை காக்க வைக்கணும் ஆரம்பிச்சிடலாமே?" என்றேன்.

"சரிங்க தயா! பர்ஸ்ட் பெல் குடுங்க. பூசை முடிங்சதும் தொடங்கிடலாம்" என்று கூறி ஐந்தே நிமிடத்தில் பூசையை முடித்து சரியாக 6:15க்கே நாடகத் தைத் தொடங்கினோம். இது எங்கள் குழுவிற்கு கிடைத்த சாதனை.

நாடகம் முடிந்து வெளியே வந்தவர்கள், "நல்ல காமெடி, நல்ல நடிகர்கள்" மொத்தத்தில் நல்லாயிருந் துச்சுன்னு பாராட்டினாங்க. எங்க எல்லாருக்கும் மகிழ்ச்சியா இருந்துச்சு!

நாடகம் முடிந்த மறுநாள், நண்பர் பாபு இன்னொருவர் மூலம் என்னை ரங்கராஜபுரத்திற்கு அழைத்து வரச் சொன்னார். நானும் ரங்கராஜபுரம் வந்தேன். அங்கே அவர், எனக்கு புது நண்பர் ஒருவரை அறிமுகம் செய்தார். அவரிடம் ஒரு கதை உள்ளதாம். அதற்கு நான் மேடைக்கதைவசனம் எழுதித்தர வேண்டுமாம். டீக்கடையில் டீயை சாப்பிட்டவாறே பேசிக் கொண்டிருந்தோம். அவரும் சுருக்கமாக கதையைச் சொன்னார். நானும் ஒப்புக் கொண்டு சிறப்பாக எழுதித் தருகிறேன் என்றேன்.

"சிறப்பாக எழுதிக் கொடுத்தால் மட்டும் போதாது. நீங்கள் இருவரும்தான் இயக்க வேண்டும்" என்று கட்டளையிட்டார். நானும் பாபுவும் சம்மதித்தோம். மேலும் அந்த நண்பர் என்னிடம் "நாடகம் அரங் கேற்றம் போது, தலைமை தாங்க பிரபல திரைப்பட பாடலாசிரியர் பூவை செங்குட்டுவன் அவர்களை அழைத்து வருகிறேன்" என்று பெருமிதமாய்க் கூறினார். பாபு என்னைப் பார்த்தார். ஏதும் தெரிய வேண்டாம் என்று நான் சைகை காட்டினேன்.

**பயணம் தொடரும்...** ●

**அரசு பொதுத்துறை நிறுவனங்களை உருவாக்கிய தலைமை அமைச்சர்கள்**

1. ஜவகர்லால் நேரு – 33
2. லால்பகதூர் சாஸ்திரி – 5
3. இந்திரா காந்தி – 66
4. மொரார்ஜி தேசாய் – 9
5. ராசீவ் காந்தி – 16
6. வி.பி.சிங் – 2
7. நரசிம்மராவ் – 14
8. தேவகவுடா, குஜ்ரால் – 3
9. வாஜ்பாய் – 7
10. மன்மோகன்சிங் – 21
11. நரேந்திர மோடி – 0

அரசு பொதுத்துறை நிறுவனங்களை விற்ற தலைமை அமைச்சர்கள்

1. வாஜ்பாய் – 7
2. மன்மோகன் சிங் – 3
3. நரேந்திர மோடி – 23

யாரெல்லாம் மக்கள் நலன் பேணும் தலைமை அமைச்சர்கள்?

நீங்களே தீர்மானித்துக் கொள்ளுங்கள்.

**சைதை மணிமாறன்.**

# காரைக்குடி இராம.சுப்பையா



தலைவர்கள் இயக்கத்தினை வழிநடத்துவார்கள். பொறுப்பாளர்கள், தலைவர் வழியைப் பின்பற்றி இயக்கம் செம்மையுற உழைப் பார்கள். உழுவார் உழகத் தார்க்காணி போல், இயக்கம் இயங்குவது கொள்கையை உள்வாங்கி தலைவர் சொல்வழியே நம் வழி என்று உழைக்கும் உன்னதத் தொண்டர்களால் என்பது மறைக்க முடியாத உண்மை.

பேச்சாளர்கள், கொள்கைளையும் தலைவரின் ஆளுமைத் திறனையும் தங்களுக்கே உரிய பாணியில் பரப்புவார்கள். அந்தப் பேச்சுக்களால் கவரப்படடு இயக்க ஈதரவாளர்களாகவும் பின்பு தொண்டர்களா கவும் மக்கள் மாறுவார்கள். திடீர் பேச்சாளர்கள், நட்சத்திரப் பேச்சாளர்கள் என பேச்சாளர்களில் எத்தனையோ ரகம்.

தலைவர்கள், பொறுப்பாளர்கள், பேச்சாளர்கள் என யாவரையும் தாங்கிப் பிடித்து கொள்கைகளைப் பரப்பும் தொண்டன் எந்த ஒரு இயக்கத்திற்கும் ஓர் அச்சாணியாகத் திகழ்பவர்கள் என்பது கண்கூடு.

தொண்டர் தம் பெருமையை சொல்லவும் அரிது என்பது உண்மையான உண்மை என்பது சில தொண்டர்களின் வாழ்வு நமக்குக் காட்டும்.

சுயமரியாதை இயக்க ஆரம்ப நிலையில் இயக்கம் வளர்க்கப்ப பாடுபட்ட தூய உண்மைத் தொண்டர்கள் வரிசையில் முக்கிய இடத்தைப் பெற்றவர் மறைந்த பெரியவர் ஐயா காரைக்குடி இராம.சுப்பையா அவர்கள். 1908இல் புதுக்கோட்டை அருகே உள்ள அரிமளம் என்ற ஊரில் பிறந்தார்.

பார்ப்பனர்களை விட அதிகமாக சடங்காச் சாரங்களில் ஊறித் திளைத்த நகரத்தார் சமூகத்தில் காரைக்குடி சொ. முருகப்பா சுயமரியாதை இயக்கத்தைக் கட்டமைத்தார். அவரின் மைத்துனர்தான் இராம. சுப்பையா.

பர்மாவிற்குச் சென்று வட்டித் தொழில் செய்யப் பழக்கப்படுத்தினாலும் அதில் மனம் செல்லாமல் மீண்டுத் தாயகம் திரும்பினார்.

இளம் வயதிலேயே பெரியாரின் குடியரசு மூலம் கவரப்பட்ட அவர் ஓய்வில்லாத ஒரு தொண்டர் மட்டுமல்ல. சிறந்த பிரச்சாரகரும்கூட. பிரிக்கப்படாத முகவை (இராமநாதபுரம்) மாவட்டத்தில் தந்தை பெரியாரை அழைத்து கடும் எதிர்ப்பிற்கிடையே சுயமரியாதை மாநாடு நடத்தினார். இது பற்றி சுப்பையா சொல்லும் நிகழ்வுகளைப் படித்தால் ஒரு திரைப்படம் பார்ப்பது போன்று இருக்கும்.

பிராமண போஜனம் என்ற நிகழ்வினைத் தன்னால் நடத்த முடியாது என்று பலத்த மிரட்டல்கள் வந்த போதும் துணிந்து நின்று நடத்திக் காட்டிய திராவிடர் இயக்கத் தீரர் நம் சுப்பையா.

அவரது துணைவியார் விசாலாட்சி அம்மையாரும் திராவிடர் இயக்கப் பணிகளில் தோளோடு நின்றவர்.

சு.குமாரதேவன்

பெரியார் நாகம்மையார், குருசாமி குஞ்சிதம், சிதம் பரம் சிவகாமி, ராமசுப்ரமணியம் நீலாவதி, பால சுப்ரமணியம் இந்திராணி, முத்து சத்தியவாணி இணையர்கள் போல் ராம.சுப்பையா விசாலாட்சி இணையர். அவரது சமதர்மவிலாசில் உணவருந்தாத பிரபலங்களே இல்லை.

1932இல் ஆதிதிராவிடர் மாநாடு நடத்த முற்பட்ட போது கடும் எதிர்ப்பு. உள்ளூர் வைதீகர்கள் மாநாடு நடத்தாதிருக்க ஆர் டி ஓ விடம் மனு போட்டுத் தடை வாங்கி விட்டார்கள். உடனே சுய மரியாதை இயக்க வீரர் பட்டிவீரன்பட்டி டபிள்யூ பி எ சவுந்திர பாண்டியன் மூலம் அந்தத் தடையை மதுரை கலெக்டரிடம் அப்பீல் செய்து, ரத்து செய்ய வைத்து மாநட்டினை சிறப்பாக நடத்திக் காட்டினார். பெரியார்,அழகிரி, சிங்காரவேலர் போன்ற தலைவர்கள் கலந்து கொண்ட அந்த மாநாட்டின் வெற்றியைப் பார்த்து எதிர்ப்புத் தெரிவித்தவர்கள் ஆதிதிராவிடர் மாநாடு சிறப்பாக நடந்து விட்டது என்று சுப்பையா வைப் பாராட்டினார்களாம். இவர்கள் தான் முதலில் பள்ளு, பறைகள் மாநாடு நடத்துகிறார்களாம் என்று கேலி செய்தவர்கள்.

செட்டிநாட்டுப் பகுதியில் பகுத்தறிவுப் பிரச்சாரம் பரவுவதைக் கண்ட நகரத்தார் சமூக பிற்போக் காளர்கள் இவரையும், இவர் தம் துணைவியார் விசாலட்சி அம்மையாரையும் விசம் வைத்துக் கொல்ல முயன்று தோல்வியடைந்தார்கள்.

தமிழ்நாட்டின் முதல் கம்யூனிஸ்ட்டான தோழர் ம.வெ.சிங்காரவேலர் தான் இவர் கட்டிய வீட்டிற்கு "சமதர்ம விலாஸ்" என்று பெயர் சூட்டி, பெயர்ப் பல கையையும் தன் செலவில் கொடுத்தார். அருமையாகக் கார் ஓட்டும் சுப்பையா சிங்காரவேலுக்கும் கார் ஓட்டியிருக்கிறார். காம்ரேட், காம்ரேட் என்று கூறி நிறையப் புத்தகங்கள் படிப்பார். படித்த புத்தகங்களை அழகாக தன்னிடம் விவரிப்பார் என்று சொல்லும் சுப்பையா, பெரியார், பட்டுக்கோட்டை அழகிரி, அண்ணா, நாவலர், பாரதிதாசன் என்று அனைத்துத் தலைவர்களும் அன்பு பாராட்டும் வகையில் நடந்து கொண்டார்.

1952இல் நடந்த கல்லக்குடி போராட்டத்தில் கலைஞருடன் கைது செய்யப்பட்டு சிறை சென்றார். அந்தச் சிறை அனுபவங்களை மிகச் சுவைபட சொல்கிறார். அப்போது இவர் சிறையில் 'உணவு அமைச்சர்' தோழர்கள் உணவுப் பிரச்சினையை சிறைக்குள் தீர்க்கும் பணியை மேற்கொண்டார். நெஞ்சுக்கு நீதி முதல் பாகத்தில் கலைஞர் சுவைபட இந்த நிகழ்வுகளை விவரித்திருக்கிறார். பெரியார், அழகிரி, அண்ணா, பாரதிதாசன், சிங்காரவேலர் போன்ற தலைவர்களுடன் பழகி அவர்களின் அணுக்கத் தொண்டராய் விளங்கியதால் மேற்படி தலைவர்கள் எழுதியுள்ள நூல்களில் இடம் பெற்றுள்ளார்.

ஓர் இரவு, திரைப்படமாக, அண்ணாவிடம் தூது சென்று ஏவிஎம் திரைப்படம் எடுக்க உதவினார். இது பற்றி ஏவிஎம் தன் வாழ்க்கை வரலாற்றில் விரிவாக எழுதியிருப்பார்.

அண்ணா அவர்களை முகவை மாவட்டத்திற்கு பல பொதுக் கூட்டங்களில் பேச அழைத்து வந்தார் சுப்பையா. முன்னிரவில் பேசிவிட்டு பின்னிரவு முழுவதும் எழுதிக்களைத்திருந்த அண்ணா ஆழ்ந்த உறக்கத்தில் இருக்கிறார். அவரை எழுப்பி அழைத்துப் போக, ஒரு பாத்திரம் கீழே விழுவது போல் போட்டு அண்ணாவை எழுப்பினாராம். காரில் போகும் போது அண்ணா சிரித்துக் கொண்டே, "தம்பி நீ உள்ளே வரும் போதே விழித்துக் கொண்டேன்". ஆமாம் அந்தப் பாத்திரம் தானாகவா விழுந்தது?" என்று குறும்பாகக் கேட்டாராம்.

"உழைப்பு ஓர் உருவம் பெற்று ஓடியாடி வேலை செய்யும் அதிசம் இராம.சுப்பையா என்று கலைஞர் பாராட்டியதோடு 1972ஆம் ஆண்டு எம்எல்சி யாக நியமனம் செய்து அவர் உழைப்பிற்கு அங்கீகாரம் அளித்தார். அவருக்கு ஏன் எம் எல் சி பதவி அளிக்கப் பட்டது? என்பது பற்றி நெஞ்சுக்கு நீதி இரண்டாம் பாகத்திலும் அவருக்கு நடந்த பாராட்டு விழாவிலும் கலைஞர் விரிவாக எழுதியும், பேசியும் உள்ளார்.

திராவிட இயக்கத்தில், தான் எப்படி ஈர்க்கப்பட்டு பணி புரிந்தேன் என்பதை ஒரு சிறிய நூலாக "நானும் எனது திராவிட இயக்க நினைவுகளும்'' என்ற தலைப்பில் வெளியிட்டார் இந்தப் புத்தகம் மூன்று பதிப்புகளைத் தாண்டி நான்காம் பதிப்புக்குத் தயாராகி வருகிறது. ஒவ்வொரு திராவிடர் இயக்கத் தொண்டனும் படித்துப் பரப்ப வேண்டிய நூல்.

தொண்டர்களின் ஆவல் அவர்களின் தலைவர்கள் பிறந்த நாளிலோ அல்லது நினைவு நாளிலோ தங்கள் இறுதி நாள் அமைய வேண்டும் என்று விழைவார்கள். காமராசர் காந்தி பிறந்த நாளிலும் எம். ஆர். ராதா பெரியார் பிறந்த நாளிலும் மறைந்தார்கள். அதுபோல் இராம. சுப்பையாவுக்கு இருந்த ஆசை "நான் சாகும் போது கலைஞர் முதல்வராக இருப்பார். அவர்தான் என் உடலுக்கு முதல் மாலை போடுவார்" என்பதாகும். அவரது ஆசைப்படியே 2151997 அன்று மறைந்த போது கலைஞர் ஓடோடி வந்து முதல் மலர் வளையம் வைத்து அஞ்சலி செலுத்தினார்.

கட்சியால் தொண்டன் நன்மை பெறுவதை விட தொண்டனால் கட்சிக்கு என்ன நன்மை என்று கேட்டு அதன்படி உழைத்தவர் என் தந்தை என்று அவரது இளைய மகன் பேராசிரியர் சுப. வீர பாண்டியன் இன்றும் சொல்கிறார்.

**வாழ்க ஐயா இராம.சுப்பையா.**



தாத்தா குப்புசாமி

# மூலிகை மருத்துவம்

*"உண்ணும் போது உயிரெழுத்தை உள்வாங்கு*

*உறங்குகின்ற போது போலாகும்*

*பெண்ணின் பால் இந்திரியம் பெருகும் போது*

*பேணிவலம் மேல்நோக்கி அவத்தே நில்லு*

*திண்ணுங்காய் இலை மருந்தும் அதுபோலாகும்*

*தினந்தோறும் செலுத்த வல்லின்*

*மண்ணூழி காலம் மட்டும் வாழ்வார் பாரீர்*

*மரணிக்கையில் அகப்பட மாட்டார் தாமே"*

இது சித்தர் சொன்ன நல்வாழ்வுக்கு வழிகாட்டும் பாடல். நாம் உணவு உண்ண ஆரம்பிக்கும் முன்பு மூச்சுக் காற்றை நல்ல ஆழ்ந்து இழுத்து மெதுவாக விட வேண்டும். இதைத் தான் நம் முன்னோர்கள் ஓம் என்ற சொல்லை உணவு உண்பதற்கு முன்பாக இறைவனைத் தொழுவதற்கு மூன்று முறை ஓம் என்று உச்சரித்து நன்கு மூச்சை உள்வாங்கி இறைவனை தியானித்து உணவருந்துவார்கள். இப்படிச் செய்யும் போது நம் வயிற்றுக்குத் தேவையான காற்றையும், உணவையும் உட்கொள்வோம். இச்செயல் நம்முடைய சீரான சுவாசத்தில் ஆழ்ந்து உறங்குவோம். அடுத்து நாம் காம வேட்கைக்கு உட்படாமல் ஒழுக்கக் கட்டுப்பாட்டோடு இருந்தோமானால் நம் உடலில் விசநீர்கள் தங்காமல் உடல் ஆரோக்கியமாக இருக்கும். உடலில் விசநீர்கள் சேருவதால் நோய்கள் உற்பத்தியாகி தீராத துன்பதற்கு உட்பட்டு, தீராத நோய்க்கு உள்ளாக நேரிடும். எனவே ஒழுக்கம் நமக்கு அவசியமானது. அடுத்து நமக்கு இறைவன் அருளியுள்ள இயற்கையின் வரப்பிரசாதமான காய்கறிகள், மூலிகை, கீரைகள் நாள்தோறும் உண்டு வருவோமானால் நீண்ட ஆயுளோடு ஆரோக்கிய வாழ்வைப் பெற்று பெருவாழ்வு வாழ்வோம் என்று இப்பாடல் நமக்கு அறிவுறுத்துகிறது.

நோய் என்றால் என்ன? நமது உடல் உறுப்புகள் சீரான இயக்கத்திலிருந்து மாறுபட்டு இயங்குவதே நோய் என்பதாகும். இதை

"மிகினும் குறையினும் நோய்செய்யும் நூலோர்

வளிமுதலா எண்ணிய மூன்று"

ஐயன் திருவள்ளுவர் அவர்கள் தமது திருக்குறள் மூலம் தெளிவாக குறிப்பிட்டுள்ளார். வளி என்ற வாதம் முதன்மையாக கொண்ட வாதம், பித்தம், கபம் என்ற முத்தோட்டங்களும் நமது உடலில் கூடினாலும் குறைந்தாலும் நோய் உண்டாகும் என்று மருத்துவ நூலில் குறிபிட்டுள்ளது என்று திருக்குறள் மூலம் நமக்கு அறிவுறுத்தியுள்ளார். நமது உடலில் வாத, பித்த, கபம் சரியான விகிதத்தில் சீராக இருக்கும் போது நமது உடல் ஆரோக்கியமாக இருக்கும் என்பதில் எவ்வித ஐயமும் இல்லை.

சித்த மருத்துவ முறைப்படி நோய்கள் மொத்தம் 4448 என்றும் இதில் 4000 நோய்கள் அவ்வப்போது வந்து போகும் நோய்கள் என்றும் 448 நோய்கள் உடலில் விசநீர்கள் சேர்ந்து உடலில் சேர்ந்து நாள்பட்ட நோய்களாக சொல்லவொண்ணா துயரத்தை ஏற்படுத்தக் கூடியது என்றும் சித்தர்கள் கோடிட்டுக் காண்பித்துள்ளனர்.

நமது உடலில் வாதம் (வளி) பித்தம், கபம் (சிலேத்துமம்) மூன்று மந்திர கோல்கள் எனலாம். இவையே நம் உடல் சீரான இயக்கத்தற்கு ஒன்று சேர்ந்து இயங்குகின்றன. இதில் எந்த ஆற்றல் அதிகரித்தாலோ, அளவை விட்டு குறைந்தாலோ அதன் நிலைக்கேற்ப நமது உடல் நோய் எதிர்ப்பு ஆற்றல் குறைந்து நோய்வாய்ப்படுகிறோம். அதோடு நம் மனிதர்களில் வாத ரோக உடல்வாகு உள்ளவர்கள், பித்தரோக உடல்வாகு உள்ளவர்கள், கபரோக உடல்வாகு உள்ளவர்கள் இருக்கின்றனர். இவர்களுக்கு எந்த உடல்வாகு உள்ளவர்களோடு, அது சம்பந்தமான நோய்கள் உடலில் தங்கி தீராத நோய்கள் உடலில் இருந்து கொண்டே இருக்கும்.

இத்தருணத்தில் நாம் கபம் (சிலேத்துமம்) சார்ந்த நோய்களைப் பற்றிக் காண்போம். நமது உடலின் ஈரப்பதத்தின் அளவே கபம் என்றும், குளிர்ச்சியான பதார்த்தங்களை உண்ணும்போதும், குளிச்சியான சீதோசன நிலை உள்ள இடத்தில் வசிக்கும் போதும் குளிர்ச்சியான காற்றை சுவாசிக்கும் போதும் நமது உடலில் கபத்தின் அளவு கூடி, கப சம்மந்தமான நோய்களுக்கு ஆட்கொள்ளப்படுகிறோம். தலையிலும் மார்பிலும் (நுரையீரலிலும்) தேங்கி இருக்கும் கபமானது உட்புறப் பகுதிகளில் உறைந்து அடைத்துக் கொண்டிருப்பதால் மூச்சுத் திணறல் ஏற்படுகிறது. அந்த அடைப்பை நீக்குவதற்குத்தான் அடிக்கடி தும்மல் வருகிறது.

கபம் உடலில் அதிகரிக்கும் போது உடல் சூடாகும். நன்கு பசித்தாலும் உணவருந்த இயலாது வாயில் இனிப்புச் சுவை மிகுந்து காணப்படும். உடல் இளைத்து முகம் வெளுத்து குளிர்ந்து நடுங்கும். நாவில் இனிப்பைத் தவிர மற்ற சுவைகள் தெரியாது. தலையில் நீர் கோர்த்து, குறிப்பாக முன் நெற்றியில் தலைவலி வரும். இப்படி பல்வேறு இன்னல்களுக்கு ஆளாக நேரிடும். அதே சமயத்தில் கபம் இல்லாமல் நமது உடல் தடையின்றி இயங்காது. மூட்டுக்களும் இலகுவாக இயங்காது நமது உடலில் தேவையான அளவு கபம் இருக்க வேண்டும்.

சளி பிடித்தவர்கள் முதன் முதலாகச் செய்ய வேண்டியது, உங்கள் வீட்டின் ஈயம், அலுமினியம் சமையல் பாத்திரங்களை அப்புறப்படுத்த வேண்டும். ஏனெனில் இப்பாத்திரங்களில் சமைத்து உண்டால் நோயின் தாக்கம் அதிகரிக்கும்.

அடுத்து மூக்கு சளி பிடித்திருந்தால் அதன் நாசித் துவாரங்களிலிருந்து சளி வந்தாலோ, அல்லது தொடர்ந்து தண்ணீர் போன்ற திரவம் (கோழை) வந்தாலோ துளசி மிகச்சிறந்த மூலிகையாகும். ஐந்து மில்லி துளசிச் சாற்றை 15 மில்லி வெந்நீரில் கலந்து சுவைத்துச் சாப்பிட்டு வந்தால் இப்பிரச்சனைக்கு முற்றுப்புள்ளி வைத்துவிடலாம். அல்லது ஆடாதொடை இலைச் சாறை நசியம் பண்ணலாம். அதே போல் குழந்தைகளுக்கு சளி பிடித்திருந்தால் துளசி மற்றும் தூதுவளைச் சாறு கலந்து மூன்று மில்லி அளவு அதோடு வெந்நீர் பத்துமில்லி கலந்து காலை, மாலை கொடுக்க மூன்று நாட்களில் நல்ல பலன் கிடைக்கும்.

நமது உடலில் சிலேத்துவம் (சளி) அதிகமானால் மார்பில் கோழை சேர்ந்திருக்கும். அப்படி ஒரு குறி நமக்குத் தெரிந்தவுடன் கோழையை அகற்றிவிட்டால் மேற்கொண்டு சிலேத்துமத்தின் தாக்கத்திலிருந்து தப்பிவிடலாம். இதற்கு நாம் மஞ்சள் கரிசாலை இலையை ஒரு கைப்பிடி அளவு எடுத்து வாயிலிட்டு மென்று, சாற்றினை விழுங்கிவிட வேண்டும். சக்கையைத் துப்பிவிடக் கூடாது. ஒரு 10 நிமிடம் கழித்து அந்த சக்கையாலேயே பல் துலக்கிவிட்டு, சக்கையை துப்பிவிட்டு, இரண்டு விரல்களை வாய்க்குள் விட்டு, தொண்டை வரை கொண்டு சென்று, முன்னும், பின்னும் இழுத்து அசைக்க, நம் நூரையீரலில் சேர்ந்துள்ள கபமானது கோழையாக வெளிவரும். இதை மாதம் ஒரு தடவையோ அல்லது சளி பிடித்திருக்கும் நிலையிலோ இம்முறையில் கோழையை வெளியேற்றலாம். இந்த முறை வழலை வாங்குதல் என்பதாகும்.

அடுத்து தலையில் நீர் கோர்த்திருந்தால் அதை வெளியேற்ற நல்லவேளை செடியின் இலையை நசுக்கி, சாறை பிழிந்து விட்டு, வெறும் சக்கையை தலையில் வைத்து, ஒரு மணி நேரம் கட்டி விட்டு எடுத்துவிட்டு, பின் சாம்பிராணிப் புகையைச் சுவாசிக்கும் போது தலையில் சேர்ந்துள்ள நீர் வெளியேறி இருப்பதை உணரலாம். நீர்க்கோர்வை மாத்திரையைக் கொண்டு நெற்றி, கண்ணம் இவைகளில் பற்றிட, தலையில் சேர்ந்துள்ள நீர் வெளியேறும். குளித்து முடிந்தவுடன் விபூதி குழைத்து நெற்றி, மார்பு, வயிறு, கைகளில் உள்ள ஒவ்வொரு மூட்டுக்களிலும் விபூதி பூச சேர்ந்துள்ள நீர் வெளியாகும்.

மார்புச் சளிக்கு பெரியவர்களுக்கு துளசியும், தூதுவளைச் சாறும் சமபங்கு பத்துமில்லி அளவோடு, இருபது மில்லி வெந்நீர் சேர்த்துக் கொடுக்க மார்புச்சளி போயே போய்விடும்.

அடுத்து கண்டம் என்று அழைக்கப்படும் கழுத்து? தொண்டைப் பகுதிகளில் சளி சேர்ந்து கமறிக் கொண்டு இருந்தால் கண்டங்கத்தரிச் செடியின் சமூலம் இடித்து கசாயம் வைத்து காலை, மாலை கொடுத்தோமானால் மூன்று நாள்களில் நல்ல பலன் கிட்டும்.

ஆஸ்துமா நோயாளிகள் பூனை காலிவித்து பருப்பை எடுத்து, பத்துநிமிடம் வெந்நீரில் ஊற வைத்து,

**ஒருவன் தான் உண்ட உணவு செரித்த பின்பு, தம் உடலுக்கேற்ற உணவை அளவாக உண்டு வந்தால், தனக்கு எவ்வித நோய்களும் அண்டாமல் மருந்தே தேவையில்லாமல் ஆரோக்கியமாக வாழலாம் என்று ஆணித்தரமாக இத்திருக்குறள் மூலம் நமக்கு அருளியுள்ளார்.**

எடுத்து காயவைத்து, பொடியாக்கி, சமபங்கு பனை வெல்லம் சேர்த்து, காலை, மாலை நாற்பத்தெட்டு நாட்கள் ஐந்து கிராம் அளவு உண்டு, பின் ஐம்பதாவது நாள் ஆடாதொடை இலைச்சாறு 100 மில்லி, அதோடு நொச்சி இலைச்சாறு நூறு மில்லி, இரண்டையும் கலந்து காலை வெறும் வயிற்றில் சாப்பிட, சில நிமிடங்களில் வாந்தி அல்லது வயிற்றுப் போக்கு ஏற்படும். அத்தோடு நுரையீரலில் பதுங்கி இருந்த வைரஸ் வெளியே வந்துவிடும். இதன் பின் அவருக்கு ஆஸ்துமா என்ற பேச்சுக்கே இடமில்லை. இந்த வைரஸ் தான் நம் நுரையீரலில் சளியை உறையவைத்து ஆபத்தை விளைவிக்கக் கூடியது. இதனால் காய்ச்சல், தலைவலி, இருமல், நீர்க்கோர்வை, தலைபாரம், சுவாசகாசம் ஏற்பட்டு நோய்வாய்ப்பட வைக்கும்.

ஆஸ்த்துமா என்பது நுரையீரலில் சளி உறைந்து சுவாசத்தைச் சீராக இயங்கவிடாமல் செய்யும், காச நோய் என்பது நுரையீரலில் படிந்துள்ள சளி நாலா வட்டத்தில் இரத்தத்தில் கலந்து உடலெங்கும் வியா பித்து உடலை உறுக்கி, எழும்பை உறுக்கி மூச்சுத் திணறல் ஏற்படுத்தி சுவாசிக்கவே சிரமப்படுத்தும்.

சிலருக்கு இருமல் தொடர்ந்து இருந்து கொண்டே இருக்கும். அதுவும் இரவு நேரத்தில் பாடாய்ப் படுத்தும். எந்த மருத்துவத்திற்கும் கட்டுப்படாது. ஒன்று கவனித்தோமேயானால் அவருக்கு உள்நாக்கு நீண்டு தொங்கி தொண்டையில் உரசி உரசி இருமல் வந்து கொண்டே இருக்கும். இதற்குச் சரியான தீர்வு சீரகம், மிளகு, கல்லுப்பு மூன்றும் சமஅளவு எடுத்து, நன்கு அரைத்து, காலையில் வெறும் வயிற்றில் மேற்கண்ட பொடியை தன் கைக்கட்டை விரலில் எடுத்து, நீண்டு தொங்கிக் கொண்டு இருக்கும் உள்நாக்கில் படும்படி நன்கு மேல்நோக்கி அழுத்தித் தேய்த்து விடுவோமானால் அடுத்த சில நொடிகளில் உள்நாக்கில் உள்ள நீர்க்கட்டு உடைந்து கெட்ட நீர் வாயிலிருந்து வெளிப் படும். இதுபோல் மூன்று முறை செய்ய உள்நாக்கு சுருங்கி, அதனால் வரும் இருமல் அத்தோடு நின்று விடும். அடுத்து மற்றும் ஒரு முறை பூண்டை நசுக்கி உமிசேர்த்து துணியில் பிழிந்தோமானால் பூண்டுப் பால் கிடைக்கும். இதையும் விரலால் தொட்டு உள் நாக்கில் தடவலாம். நல்ல பலன்தரும். சில சமயங்களில் உள் நாக்கில் புண் வந்து விடும்.

சாதாரண இருமலுக்கு மூன்று மிளகு, ஒரு சிட்டிகை சீரகத்தை மென்று வாயில் அடக்கிக் கொண்டு, அதன் சாறை கொஞ்சம் கொஞ்சமாக உள் வாங்க இருமல் கொஞ்சம் கொஞ்சமாகக் கறைந்து விடும்.

சளி பிடித்ததனால் காய்ச்சல் வந்தால், நூறு கிராம் மிளகு எடுத்து ஒரு கிண்ணத்தில் வைத்து, மிளகு மூழ்கும் வரை வேலிப்படுத்திக் கொடி பாலில் ஊற வைத்து, வெய்யிலில் உலர்த்தி, மிளகளவு உருண்டை யாக உருட்டி, நன்கு காயவைத்து, காய்ச்சல் வரும்போது காலை, மாலை இரண்டு நேரம் உண்டு வர வைரஸ் காய்ச்சலோ ஓடி விடும். கபசுர குடிநீரும் காலை, மாலை 35 மில்லி வீதம் மூன்று நாட்கள் குடித்தாலே போதும். இன்னும் கற்பூரவள்ளி, தூதுவளை, துளசி, ஆடாதொடை, நொச்சி, வெற்றிலை குடிநீராக்கியும் குடிக்கலாம்.

இது இல்லாமல் சுக்கு, மிளகு, திப்பிலி கலந்த திருகடுக சூரணம் சளிக்கு ஒரு அற்புதமான மருந்தாகும். மேலும் முத்தக்காசு என்று சொல்லக்கூடிய கோரைக் கிழங்கு எல்லாவிதமான வைரஸ் காய்ச்சலையும் குணப்படுத்தும். அதோடு நம் உடலில் தேங்கியுள்ள கழிவுகளையும் வைரஸ் கிருமிகளையும் வெறியேற்றும் ஆற்றல் மிக்கது. இன்னும் சளிக்கான திப்பிலி, ஓமம், தாளிசாதி, அதிமதுரம், பூண்டு, சிற்றரத்தை, அக்கரகாரம் இப்படி பல்வேறு வகை மூலிகைச் சரக்குகளும் சளி போக்கப் பயன்படும்.

மேலும் நாம் உணவு கட்டுப்பாட்டுடன் இருந்தால் எவ்வகை நோயாக இருந்தாலும் நோய் நீக்கி மருந்தில்லாமலே ஆரோக்கியமாக வாழ முடியும். இதைத்தான் ஐயன் திருவள்ளுவர் அழகாக குறள் மூலம் கூறுகிறார்.

*மருந்தென வேண்டாவாம் யாக்கைக்கு அருந்தியது*

*அற்றது போற்றி உணின்.*

ஒருவன் தான் உண்ட உணவு செரித்த பின்பு, தம் உடலுக்கேற்ற உணவை அளவாக உண்டு வந்தால், தனக்கு எவ்வித நோய்களும் அண்டாமல் மருந்தே தேவையில்லாமல் ஆரோக்கியமாக வாழலாம் என்று ஆணித்தரமாக இத்திருக்குறள் மூலம் நமக்கு அருளியுள்ளார். எனவே தனக்கு ஒவ்வாத உணவை எடுத்துக் கொள்ளாமல் தனக்கேற்ற உணவை உண்டு ஆரோக்கியமாக வாழ வாழ்த்துகள்.

கபம் சார்ந்த உணவு முறைகள் அடுத்த இதழில் தொடரும்...

மருத்துவர் **இராஜா சாக்ரடீஸ்,**

தஞ்சாவூர்.

சிறுகதை

மனிதர்களுக்கு உடற்காயம் ஏற்படுத்த வேண்டும், உயிரைப் பறிக்க வேண்டும் என்ற எண்ண மெல்லாம் எனக்கு இல்லை. எனது பன்னிரெண்டாம் அகவையில், என் அம்மா, அப்பா அன்றாடம் பெருந்துயரைச் சுமந்து கொண்டி ருந்தவர்கள் போல் இருந்தார்கள். பல மணி நேரம் அழுது கொண்டும் இருந்தனர்.

நான் சிறுவனாக இருந்தாலும் அழுகைக்கான காரணம் கேட்டேன். அவர்களோ பல புகைப்படங்க ளைக் காட்டினர். தத்தியர்கள் கொன்று விட்டனர் என்றார்கள். அவர்களைக் கொன்றதால் நீங்கள் ஏன் அழுகிறீர்கள் என்று கேட்டேன். அப்போது, அவர்கள் சில படங்களைக் காட்டி, உன் அக்கா, உன் சித்தப்பா, உன் மாமா, அண்ணன், அண்ணி, அண்ணன் குழந்தை, அத்தை என்றெல்லாம், நான் அதுவரை அறிந்திராத உறவுகளைக் கூறி மேலும் மேலும் அழுதார்கள். அவர்களின் அழுகையைக் காண ஒப்பாமால் கேள்விகள் கேட்பதை விட்டுவிட்டேன்.

ஓரிரு ஆண்டுகள் கழித்து நாங்கள் புலம்பெயர்ந்த நாட்டிற்கு ஏதிலியாக வந்து சேர்ந்த மலரவன் அண்ணன் எங்கள் வீட்டிற்கு வந்தார். மலரவன் அண்ணனின் அம்மாவும் வருவார். எப்போதும் அவர்களிருவரும் கவலை தோய்ந்த முகத்தோடும், சிந்தனை முகந்தோடும்தான் இருப்பார்கள்.

எனது பேற்றோருடன் அவர்கள் பேசுவார்கள், அழுவார்கள், இறைவனை வேண்டுவார்கள். ஆனால் அவர்கள் சிரித்து மட்டும் பார்க்கவில்லை நான். இது தொடர்கதையாவே இருந்தது.

மலரவன் அண்ணன் என்னைவிட நான்கு அகவை மூத்தவர். மலரவன் அண்ணனிடம் நான் பேசுவேன். அவர் எனது அகவைக்கு ஏற்ற ஆள் இல்லை என்பதைத் தெரிந்து கொண்டேன். அவர் பேச்சில் மகிழ்ச்சி என்பது துளியும் இல்லாமல் இருந்தது. அவர் எனக்கு பல நிகழ்வுகளைச் சொல்வார். அவை கதைகள் என்று தொடக்கத்தில் நினைத்தேன். பிறகுதான் உரைத்தது உண்மை என்று. அண்ணனிடம் பேசப் பேச, அவர் கண்ட அடக்கு முறைகளையும், அதிகார வர்க்க ஆக்கிரமிப்புகளையும், தொடக்க நாட்டு மக்கள் பட்ட துன்பங்களையும் உணரத் தொடங்கினேன். மலரவன் அண்ணன் சொன்ன செய்திகள் எல்லாம் என் மனதை நார்நாராகக் கிழித்தெறியத் தொடங்கின.

ஒரு இனமே இருக்கக்கூடாது என்ற கோணத்தில் தத்தியர்கள் தொடக்க நாட்டு மக்களை கொன்றதை அறிந்தும், தொடக்கநாட்டு மக்கள் அழிப்பு போர்ப் படங்களை கண்ட பிறகும் என் மனம் ஒரு நிலையில் இல்லாமல் தவித்தது. தொடக்க நாட்டு மக்கள் அழிவுக்கு தத்தியர்கள் வருந்தவில்லை என்பதை அழிவு காலத்தில் மட்டுமல்ல, அதற்குப் பிறகும்கூட நான் கேள்விப்படவில்லை. அது மட்டுமல்ல, தொடக்க நாட்டு மக்கள் அழிப்பை முடித்துவிட்டு அதிலே மகிழ்ச்சிக் கொண்டாட்டங்கள் நடத்துகிற செய்களைக் கேட்டேன். ஒளிபரப்புகள் மூலமும் கண்டேன்.

ஒன்றுமே அறியாத, வஞ்சகம் அறியாத, பழி அறியாத, பிறருக்கு தீங்கு நினையாத எத்தனையோ பேரின் குருதி சிந்தப்பட்டிருக்கிறதே, அதற்குப் பதில் என்ன? என்று என் உயிர் உரக்கக் கத்தியது.



# வினை

இருங்கோவேள்

**"தம்பி இனிமேல் சண்டை பிடித்து நாம் தாயகம் பெற இயலாது, நம்மிடம் சண்டை பிடிக்கக்கூடிய ஆட்களும் இல்லை. ஆயுதங்களும் இல்லை. நமக்கு அணுக்கமான நாடுகளும் இல்லை. இந்த நிலையில், நாம் வேறு நுணுக்கங்களைக் கையாண்டுதான் தாயகம் பெற வேணும்"**

தத்திய கோர முகத்தற்கு பாடம் கற்றுக் கொடுக்க வேண்டும் என்ற எண்ணம் என்னில் வேர்பிடிக்கத் தொடங்கியது. தொடக்க நாடு பற்றிய செய்திகளையும் விடுதலைக்குப் போராடிய தலைவரின் ஆளுமை யையும், ஈகங்களையும் அறிந்து கொண்டேன். என் உறவுகளின் அழிவை என்னால் தாங்கிக் கொள்ள இயலவில்லை. என் பெற்றோர் என் தமக்கையை பறிகொடுத்து விட்டுத்தான் கைக்குழந்தையாக இருந்த என்னை தூக்கிக் கொண்டு இந்த வெளி தேசத்திற்கு வந்து சேர்ந்திருக்கிறார்கள்.

வாழ்க்கைத்தரம் வெளி தேசத்தில் நன்றாக இருக்கிறது. இருந்தாலும்கூட மனம் சொந்த தேசத்தையே தான் சுற்றிச் சுற்றி வந்து கொண்டிருக் கிறது. பன்னிரெண்டு அகவை வரை தேசம் பற்றி அறியாமலிருந்த போது என் மனம் ஆழ்கடல் போல் அமைதியாக இருந்தது. என் நாட்டின் அவலம் பற்றி கேள்விப்பட்ட பிறகு, போர் நிகழ்வுகளை காணொலி மூலம் அறிந்து கொண்ட பிறகு என் மனதில் முரட்டுத்தனமான அலைகள் எழுந்து கொண்டே இருந்தன. என மனதில் எப்போதும் ஒரே இரைச்சல்.

இதற்கு ஏதாவது செய்தாக வேண்டும் என்று, என் பதின் அகவையில் பதியம் போட்டேன். அதற்கு மலரவன் அண்ணன் தண்ணீர் ஊற்றினார். கல்வி கற்றேன். இக்கல்வி மூலம் தாயகத்திற்கு ஏதாவது செய்ய முடியுமா என்ற எண்ணத்துடனேயே கல்வி கற்றேன். கற்கும் கல்வியால் தாயகம் எம் கைக்கு கிடைக்க வேண்டும் என்றே கல்வி கற்றேன்.

மலரவன் அண்ணன், "தம்பி இனிமேல் சண்டை பிடித்து நாம் தாயகம் பெற இயலாது, நம்மிடம் சண்டை பிடிக்கக்கூடிய ஆட்களும் இல்லை. ஆயுதங் களும் இல்லை. நமக்கு அணுக்கமான நாடுகளும் இல்லை. இந்த நிலையில், நாம் வேறு நுணுக்கங்களைக் கையாண்டுதான் தாயகம் பெற வேணும்" என்று அடிக்கடி கூறுவார்.

மலரவன் அண்ணனின் இந்தக்கூற்று, என் மனதில், ஏதாவது ஒரு புதிய வழியைக் கையாண்டாக வேண்டும் என சொல்லிக் கொண்டே இருந்தது.

2019ஆம் ஆண்டு டிசம்பரில் தொடங்கி 2020 தொடக்கத்தில் உலகை நிலைகுலைய வைத்த கொரோனா நுண்ணுயிரி எனக்கு ஒரு புதிய வழியைக் காட்டியது.

மனிதனை மட்டுமே கொல்லக்கூடிய இந்த நுண்ணுயிரி விலங்குகளையோ, பறவைகளையோ ஒன்றும் செய்யவில்லை. கொரோனா பற்றி விதவிதமாக கருத்துகள் வெளிவந்தன. சீனாவின் ஊகான் பகுதியில் உருவாக்கப்பட்டது என்றார்கள். அங்கே கொரோனா வால் ஏற்பட்ட பாதிப்பு கட்டுப்படுத்தப்பட்டன. பின்பு கொரோனாவின் தாக்கங்கள் இல்லாமல் போனது. பின்பு மறுபடியும் வரத் தொடங்கியது என்றார்கள்.

உலகில் ஒருசில நாடுகள் தவிர எல்லா நாடுகளும் கொரோனாவால் பாதிக்கப்பட்டன. வான்ஊர்தி போக்குவரத்து முற்றிலும் நிறுத்தப்பட்டது. மனித குலம் இதுவரை காணாத சிக்கலைக் கண்டது. உலகையே ஆட்டிப்படைத்துக் கொண்டிருந்த அமெரிக்கா, ஆடிப்போய்விட்டது. பல்லாயிரக்கணக்கான மனித உயிர்களை அமெரிக்க தேசம் இழந்தது.

கொரோனா உலகை உலுக்கியபோது எனக்கு அகவை 23. நான் அறிவியல் துறையில் பட்டப் படிப்புகள் முடித்திருந்தேன். கொரோனா எனது நீண்ட நாள் மௌன வேண்டலுக்கு ஒரு சிறு வெளிச்சப் பகுதியைக் காட்டியது.

விலங்குகள், பறவைகளைப் பாதிக்காமல் மனித உயிர்களை மட்டும் பாதிக்கும் இந்த நுண்ணுயிரியைப் பற்றி ஆய்ந்துணரத் தொடங்கினேன்.

இந்த ஆய்வில் பல முன்னேற்றங்களைக் கண்டேன். மனிதர்களின் மரபு அணுக்கள் பற்றியும் ஆய்ந்தேன்.

தமிழ் நாட்டில் தேனி மாவட்டத்தில் ஒரு மனிதரின் மரபு அணுக்கள்தான் உலகில் மிகவும் முந்தைய மரபணு வழித்தோன்றல் என்பதைப் படித்திருக்கிறேன். அதை ஆய்வுக்கு எடுத்துக் கொண்டேன். ஆய்வுப் பணிகளில் என்னுடன் இரு வெளிநாட்டினரும் ஈடுபட்டிருந்தனர். அவர்களின் உதவி எனக்கு மிகவும் உறுதுணையாக இருந்தது. அவர்கள் எனது உள் நோக்கத்தை தெரிந்து கொள்ளக்கூடாது என்பதற்காக, மேலை தேசத்து இருவேறு இனக்குழு மக்களின் மரபணுக்களின் தன்மையை ஆராய்ந்து தெரிந்து கொள்வோம் என்று பணியைத் தொடங்கினோம். அதில் வெற்றியையும் அடைந்தோம்.

இந்த ஆய்வு முறையைத் தொடர்ந்து, நான் மட்டும், தொடக்க நாட்டு மக்களுக்கும் தத்தியர்களுக்கும் உள்ள மரபணுக்களை ஆய்வு செய்யத் தொடங்கினேன். பல வேறுபாடுகளைக் கண்டேன். இந்த ஆய்வில் தொடக்க நாட்டவரும் தத்தியரும் திருமணம் செய்து கொண்டு அவர்கள் மூலம் உலகிற்கு வந்தவர்களின் மரபணுக் களையும் ஆய்ந்தேன். சிலருடைய மரபணுக்களில் தொடக்கநாட்டுப் பண்புகள் அதிகமாகவும், சிலரதில் தத்தியர்களின் குணங்கள் அதிகமாகவும் இருக்கக் கண்டேன். ஆகவே, அப்படிப்பட்டவர்களில் தத்திய

குணங்கள் அதிகமாக உள்ள மரபணுக்களைப் பாதிக்கக் கூடிய நுண்ணுயிரியை உருவாக்க முனைந்தேன். இந்த முனைப்பு வெற்றியைத் தந்தது.

தத்தியரைக் கொல்லும் அந்த நுண்ணுயிரியை எப்படி தொடக்க நாட்டுக்கு அனுப்புவது? யார் மூலமாக அனுப்புவது என்ற சிந்தனையை செயல படுத்தும் முடிவுக்கு வரவே எனக்கு கிட்டத்தட்ட ஓராண்டு காலம் ஆனது. இதற்கிடையில் தத்தியர் சிலரோடு நட்புத் தொடர்பில் இருந்தேன்.

தொடக்க நாட்டில் இனஅழிப்புப் போரில் பல்லாயிரக் கணக்கான அப்பாவித் தொடக்க நாட்டு மக்களை கொன்று குவித்த நாளை தத்திய அரசாங்கம் ஆண்டுதோறும் வெற்றி விழாவாகக் கொண்டாட வதையும் அதில் தொடக்க நாட்டு மக்களைக் கொன்றவர்களுக்கு விருது அளித்து சிறப்பிப்பதாகவும், அவர்களுக்கு வாழ்த்துக்கூறுவதாகவும், ஒவ்வொரு வரும் கட்டிப்பிடித்து மகிழ்ச்சி தெரிவித்துக் கொள்வ தாகவும் அறிந்தேன்.

எனக்குப் பழக்கமான தத்தியர்களில் இருவர் இந்த ஆண்டு (2025) நடக்கும் அவர்களது வெற்றி விழா வுக்கு? செல்லப்போவதையும் அறிந்து கொண்டேன்.

தத்தியரைக் கொல்லும் நுண்ணுயிரி, ஒரு தத்தியர் மேல் பட்டால் 25 மணி நேரத்திற்குள் அவனைக் கொல்லும் என்பது எனது ஆய்வின் முடிவு. இந்த நுண்ணுயிரிக்கு ‘வினை’ என்று பெயரிட்டேன். இப்பெயர் எனக்கு மட்டுமே தெரிந்த ஒன்று.

வெற்றிவிழா செல்லும் தத்திய நண்பர்களில்? ஒருவர் மேல் ‘வினை’ யை ஏற்ற வேண்டும் என்று முடிவு செய்து, அருமையான இரண்டு சட்டைகள் வாங்கி, அதில் இருந்த பொத்தான்களை அகற்றிவிட்டு, எனது செலவில் தங்கப் பொத்தான்கள் வாங்கி அந்தச் சட்டையில் தைத்தேன்.

தத்திய நண்பனிடம்? தேசத்துக்குப் போவதாக அறிந்தேன். எப்போது செல்கிறீர்கள் என்று கேட்டேன். விபரம் கூறினார். நம் தேசத்தில் உள்ள என் உறவினர் ஒருவருக்கு ஒரு சட்டை ஒன்றைக் கொடுக்க வேண்டும். அவரையே வந்து வாங்கிக் கொள்ளச் சொல்கிறேன். உங்களால் கொண்டு செல்ல இயலுமா என்று கேட்டேன். “அவர் வந்து வாங்கிக் கொள்வதானால் கொண்டு செல்கிறேன்” என்றார். சரி, நான் வான் ஊர்தி நிலையத்திற்கே வந்து விடு கிறேன் என்றேன். வாருங்கள் என்று நேரத்தைச் சொன்னார்.

அந்த நாள் வந்தது. வானூர்தி நிலையம் செல்வ தற்கு முன் நமது ‘வினை’ வீரர்களை இரண்டு சட்டை களின் தங்கப் பொத்தான்களில் வைத்தேன். சட்டை களை மடித்து தனித்தனியாக பைகளில் போட்டுக் கொண்டு, வானூர்தி நிலையம் சென்றேன்.

நண்பருக்குப் பேசினேன், அவர் நிற்கும் இடத்தைச் சொன்னார். சென்றேன், ஒன்றை முதலில் கொடுத்தேன். நான் கொடுத்துவிடுகிறேன் என்று கூறி விடைபெற முயன்றார். இருங்கள், அதே போல் உங்களுக்கும் அன்பளிப்பு வைத்திருக்கிறேன் என்று கூறி மற்றொரு சட்டையை அவரிடம் கொடுத்தேன். அவர் பார்த்துவிட்டு மிகவும் நன்றாக இருக்கிறது என்று கூறி, தங்கப் பொத்தானைத் தடவிக் கொண்டே இருந்தார். தூண்டிலில் மீன் அதுவாகவே மாட்டியிருக்கிறது என்ற மகிழ்ச்சியில், இது தங்கப் பொத்தான். அந்தச் சட்டை யிலும் இருக்கிறது. ஒன்று உங்களுக்கு, அது எனது உறவினருக்கு என்றேன். என்னையும், உங்கள் உறவாக நினைக்கிறீர்கள் நன்றி என்று கூறி விடை பெற்றான். நாங்கள் உறவாகத்தான் அனைவரையும் நினைத்தோம், நினைக்கிறோம். உறவாடிய எங்கள் உயிரைப் பறித்தபின் அதற்கு பதில் தர வேண்டாமா? போ நண்பனே போ! உயிரின் அருமையை உன் இனம் தெரிந்து கொள்ளட் டும் என்று என் மனம் அவனை வழியனுப்பியது.

எம் தாயக விடுதலைப் போரில் இன்னுயிர் ஈந்த ஈகியருக்கு ஏதோ ஒரு நன்றிக் கடனை நிறைவேற்றிய நிறைவோடு இல்லம் திரும்பி, இரவு நல்ல உறக்கம் கொண்டேன்.

தத்தியர்கள் எம் உறவுகளை அழித்த நாளை கொண்டாட அவர்கள் கூடுவதை அலைபேசியில் நேரலையில் பார்க்கத் தொடங்கினேன். எம்மக்கள் அழிக்கப்பட்ட நினைவுகளுடன் இந்த 2025ஆம் ஆண்டில் என் செவிகளும் விழிகளும் காத்திருந்தன, தத்தியர்களின் அழிவுச் செய்தியைக் கேட்பதற்காக. அந்த நேரம் வந்தது. ஐவர் மரணம். மரணத்திற்கான காரணம் தெரியவில்லை. என்ற சிறிய செய்தி. நாட்டின் வெற்றிக் கொண்டாட்டம் சனாதிபதி தலைமையில், பிரதமர், தத்திய இராணுவத் தளபதிகள், முன்னாள் தளபதிகள், முன்னாள் இந்நாள் தத்திய இராணுவ வீரர்கள், அமைச்சர்கள், அரசியல்வாதிகள் என்று அனைத்துப் பெரியவர்களும்? விழாவில் பங்கேற்றிருக்கின்றனர் என்ற செய்தி பெரிதாக வந்து கொண்டிருந்தது. 12:20 மணிக்கு விழா கோலகலமாய் நிறைவு பெற்றது என்ற செய்தி வரை பார்த்தேன். அதன்பிறகு, எனது கணினியில் இருந்த எம்மக்கள் அழிப்புப் போரில் எம் உறவுகள்

**நான் பிறந்த பயனை அடைந்துவிட்டேன். தொடக்க நாடு எம்மவர்க்கே! இடைக்கால அரசின் தலைமைப் பொறுப்பில் தொடக்க நாட்டுக்காரர் இருப்பார். நிறைவுடன் நித்திரைக்குச் சென்றேன்**

பட்ட துன்பத்தைப் பார்க்கத் தொடங்கினேன். உணவருந்த என் மனம் இடம் தரவில்லை.

நான்கு மணி நேரங்கள் கழித்து, தொடக்க நாட்டிலிருந்து அலைபேசி எடுத்துப் பேசினார் என் உறவினர். இறைவன் இருக்கிறார். இன்று, நம்மவர்கள் இறந்த நாளை வெற்றி விழாவாகக் கொண்டாடிய வர்கள் பலர் இறந்து கொண்டிருக்கிறார்கள். ஒவ்வொரு நிமிடமும் எண்ணிக்கை கூடுகிறது. என்னவென்றே தெரியவில்லை. நான் வீட்டிலேயே இருக்கிறேன் என்றார்.

நான், அப்படியா என்ற வியப்பை வார்த்தையில் காட்டிவிட்டு, சில உசாவுதல்கள் நிகழ்த்திவிட்டு கண் மூடினேன். சில மணி நேரங்கள் கழித்து அவரே பேசினார். தத்தியர்களின் இறப்பு எண்ணிக்கை ஒரு இலட்சத்தைத் தாண்டிவிட்டது என்றார். இந்தச் செய்தி அவருக்கு முன்பதாகவே செய்தி நிறுவனங்கள் கூறிவிட்டன. எனக்குத் தெரிந்தாலும், ஐயோ, அப்படியா என்றேன்.

உலகம் அதிர்ச்சியில் உறைந்து நின்றது. பல தலைவர்கள் குழம்பினர், எல்லா செய்தி நிறுவனங்களும் தொடக்கநாட்டு மக்கள் அழிப்பு நிகழ்வை நினைவு கூர்ந்து, இன்றைய அழிவையும் பேசத் தொடங்கின. உலகத்தோர் பலருக்கு மிச்சமிருக்கிற தொடக்கநாட்டு மக்கள் மேல் அச்சம் வந்தது. யாரோ தொடக்க நாட்டுக்காரர்கள்தான் செய்திருக்கிறார்கள் என்று பேசத் தொடங்கினர்.

இன அழிப்புப் போரில் இறந்த தொடக்கநாட்டு மக்கள் எண்ணிக்கையை விட அதிமான தத்தியர்கள் இறந்து விட்டார்கள் என்ற தகவல் உலகுக்குச் சொல்லப்பட்டது.

நான் பிறந்த பயனை அடைந்துவிட்டேன். தொடக்க நாடு எம்மவர்க்கே! இடைக்கால அரசின் தலைமைப் பொறுப்பில் தொடக்க நாட்டுக்காரர் இருப்பார். நிறைவுடன் நித்திரைக்குச் சென்றேன்.

யாராலும் என்னைக் கண்டுபிடிக்க இயலவில்லை. இது எனக்கு இறைவனுக்கும் மட்டுமே தெரிந்த சங்கதி.

எஞ்சிய சிறு தொகையான தத்தியர்கள் வீட்டுக்குள்ளேயே இருந்தனர்.

தொடக்க நாட்டார் ஆட்சியில் தத்தியர்கள் உரிய மரியாதையுடன் அடக்கம் செய்யப்பட்டனர். அவர்களது பெயர் தாங்கிய கல்லறை வளாகம் உருப்பெற்றது.

எனது அடுத்த ஆய்வு தொடங்கியது, எந்த நுண்ணுயிரி தாக்கினாலும், அதிலிருந்து விடுபட முந்தைய தொடக்க நாட்டார் மருத்துவ முறைப்படி மருந்து தயாரிக்கும் ஆய்வு. தொடக்க நாட்டு மக்களால்தான் இது முடியும்.

●

# என்னோடு வாழ்கிறாய்!

உயிரே!
என்னோடு
நீ வாழ்கிறாய்

நீ உறவாடும்
வரையே எனக்கு
மனிதன் என்ற பெயர்

நீ என்னை
மறந்துவிட்டால்
என் பெயர் பிணம்!

ஒரு நாளுக்கு மேல்
தாங்காதே
என்னை மதித்தவர்களும்
முகம் சுழிப்பார்கள்

நீ என்னுள் வாழும்
ஒவ்வொரு நிமிடமும்
இருப்பேன் நான்
இவ்வுலகில்

மனிதக் கூடுக்கு
பழுது ஏற்பட்டால்
உடலை விட்டு
விலகிவிடுவாய்

உருண்டாலும்
புரண்டாலும்
வரமாட்டாய்
உன்னதமான
காற்றே சுவாசமே

இயற்கை கொடுத்த
உயிர் உனக்கு
மதிப்பில்லையே
மனிதன் உருவாக்கிய
பணத்திற்கு மதிப்பிருக்கே

சொத்துச் சேர்க்கிறான்
தலைமுறைக்கும்
சேர்த்தே சொந்தமில்லா
உடலில் உள்ள உயிருக்கும்?

வாணியம்பாடி **தியாகராசன்,**
சென்னை சலூன் கடை.

●



Owned, Published and Printed by **V. Thalapathi,** Published from No. 13/5 Buddha Street, Rangarajapuram, Kodambakkam, Chennai - 24. and Printed at **DESIGNS PARK,** No. 22 Weavers Street Triplicane, Chennai-5, Editor: **V. THALAPATHI.** Admin office: No. 124, NTR Street, Rangarajapuram, Kodambakkam, Chennai-24.


வீட்டில் இருந்த படியே மாதம் ரூ. 5000/-
வருமானம் பெறலாம்...
இணையுங்கள் OUR LIFE'ல் உயருங்கள் உங்கள் LIFE'ல்
OUR LIFE PRODUCTS
Office Address:
OUR LIFE Marketing,
11,Sirungeri Nagar,
1st Floor,Byepass Road,
Madurai-16.
Land Mark:
Ramnagar Bus stop,
Near PTR
Coffee Shop & KFC.
Ourlife
Cell: 9500759159 / 8939225156
Gracery, Homecare extra

MUTRAM - Tamil & English Monthly RNI No. TNBIL/2010/36924.

பன்மை வெளி

2020 புதிய வெளியீடுகள்




தொடர்புக்கு: 044 24742911 / 98408 48594 / 94439 18095